# பூங்கனி

THE POONKANI

பூங்கனி

கனி 04 | சிறுவர் மாத இதழ் | ஜூலை 2005




# Reebok City

- சகலருக்கும் தேவையான சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ள.....




- அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்.....

- சகலவிதமான கடிகாரங்கள்....



- Bag வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள.....



## Reebok City

**இல. 87, கண்டிவீதி, வவுனியா.**

உரிமையாளர் : **K. கிருஷ்ணாநந்தன்**

# இம்மாத பூங்கனியில்


பிறருக்கு உதவு -சிறுகதை 03

"உலக வரலாறு" 12

ரகசிய புதையல் 15

ஐ! அப்படியா? 19

www.ஆச்சரியம்.com! 28

மாதம் ஒரு பாடசாலை 34




நாடகக் கலைஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564இல் பிறந்தார்.

பூங்கனி
சிறுவர் மாத இதழ்
A Monthly magazine for children
கனி - 04
ஜூலை- 2005

ஆசிரியர் பார்வையில்

## ஆகவே தான்...

**வணக்கம் வாசகர்களே!**

இதோ இம்மாதக் கனி உங்கள் கரங்களில்! எப்போதும் போல உங்களுக்குப் பிடித்தமான விடயங்களோடு!!

இம்மாதம் பக்க அமைப்பில் பல மாற்றங்களைச் செய்திருக்கிறோம். எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பது நல்லதல்லவே! "பூங்கனி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதிரி" என்று பலர் பரவசப்படுகிறார்கள்! அவர்களுக்காகவே இந்த மாற்றங்கள்!

சரிவாசகர்களே, எம்மிடம் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலதரப்பட்டோர் ஒரு குற்றச்சாட்டை முன் வைக்கிறார்கள். "மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டது" என்பதே அது!

இது தொடர்பாக மாணவர்களைக் கேட்டால், "எமக்கு நிறைய வாசிக்க விருப்பம்தான் ஆனால் நாம் விரும்பி வாசிக்கும் படியான சிறுவர் சஞ்சிகைகள் இலங்கையில் வெளிவருவதில்லையே" என்கிறார்கள்.

மாணவர்களின் இந்தக் குறைக்குத் தீர்வு தருவதே எமது நோக்கமாகும். அதனால்தான் எமக்குள் உறைந்து போயிருக்கும் இலக்கியம் மீதான பிடிப்பையும், அவ்வளவு சீக்கிரம் வாசிப்பவர்களுக்கு விளங்காத, சொல்லாண்மையை வெளிப்படுத்தும் வாக்கியங்களையும், இன்னும் கருத்தியல் ரீதியாக நாம் கொண்டுள்ள சுயவிளக்கங்களையும், இன்னும் பலதையும்.... ஓரங்கட்டிவிட்டு, வாசிப்பவர்களுக்கு இலகுவில் விளங்கக் கூடியவாறான மொழி நடையில் எழுதுகிறோம். இவ்வாறு எழுதுவதால்தான் பூங்கனியின் வாசகர் தொகையை அதிகரிக்கும் கைங்கரியத்தை எம்மால் செய்ய முடிகிறது.

எப்போதுமே வாசகர்களுக்குப் பிடித்ததை இலகுவில் அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் தருவதே எமது இலக்காகும்.

அதனால்தான் தீர்க்கப்படாமல் இருக்கும் எமது "இலக்கியத் தாகத்தைப் பற்றி நாம் கவலைகொள்வதில்லை. முற்றிலும் வாசகர்களுக்கு உரிமையான பூங்கனியை, நாம் எமது "எண்ண வெளிப்பாடுகளுக்குப்" பயன்படுத்துவது முறையல்ல என்பது எமது அபிப்பிராயமாகும்.

ஆகவே தான் நாம் இப்படி! எமது பயணத்தில் இதுவும் ஒரு படி!!

*அன்புடன் ஆசிரியர்.*

**வாசித்தலினூடே வாழ்வைக் காண்போம்.**

ஆசிரியர் : கே.ஆர்.றஜீவன்
பக்க வடிவமைப்பு : கே.திலீபன்
முகாமையாளர் : ஏ.ஆர்.இராஜேஸ்வரன்



1915ம் ஆண்டு பாடகர் P.U. சின்னப்பா பிறந்தார்.

# பிறருக்கு உதவு


ராமுவும், சோமுவும் ஒரே வகுப்பில் படித்து வருபவர்கள். ராமு எல்லாப் பாடங்களிலும் திறமைசாலி. அதனால் அவனுக்கு கர்வம் அதிகம். சுமாராக படிப்பவர்களைக் கண்டால் கிண்டல் செய்வான். பாடங்களை யாருக்கும் சொல்லிக் கொடுக்க மாட்டான். கெட்ட எண்ண முடையவன். பிறருக்கு எந்த உதவியும் செய்ய மாட்டான்.

சோமு படிப்பில் நடுத்தரம் தான். ஆனால் விளையாட்டில் வீரன், நீச்சல்போட்டியில் என்றுமே முதலிடம்தான். மற்றவர்களுக்கு துன்பம் என்றால் தனக்கு வந்தது. என எண்ணி அவர்களுக்கு உதவும் இயல்புடையவன்.

விஞ்ஞான பாடத்தை படித்துக்கொண்டிருந்த சோமு வுக்கு சில பகுதிகள் விளங்க வில்லை. உடனே அருகில் இருந்த ராமுவின் வீட்டிற்கு சென்று சொல்லித்தரும்படி கேட்டான்.

"எனக்கு ஒரே தலை வலியாக இருக்கிறது. என்னால் சொல்லித்தர முடியாது" என் பொய் சொன்னான் ராமு. பின்னர் சற்றுத் தொலைவில் உள்ள விஞ்ஞான ஆசிரியர் வீட்டிற்குச் சென்று. அவரிடம் தனது சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக் கொண்டான் சோமு.

"ஏம்பா, உன் வகுப்பு ராமு விஞ்ஞானத்தில் புலி ஆச்சே, உன் பக்கத்து வீட்டில்தானே இருக் கிறான். அவனிடம் கேட்டிருக் கலாமே" என்றார் ஆசிரியர்.






பாடகி M.S. சுப்புலட்சுமி 1916இல் பிறந்தார்.

"அவன் யாருக்கும் சொல்லித்தர மாட்டேங்கிறான் சார்" என்றான் சோமு.

மறுநாள் விஞ்ஞான ஆசிரியர் ராமுவை அழைத்து ராமு! நீ மற்ற மாணவர்களுக்கும் உனக்குத் தெரிந்த பாடங்களைச் சொல்லிக்கொடு, மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதால் உனக்கும் நன்கு புரியும்" என்றார்.

எவ்வளவுதான் சொல் லியும் ராமு மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதை விரும்ப வில்லை. தான் சொல்லிக் கொடுத்தால் அவர்கள் அதிக மதிப்பெண் பெற்றுவிடுவார்களே என்று வேறு பயம்.

ஒருநாள் ராமுவும், சோமுவும் குளத்தில் குளிக்கச் சென்றார்கள். சோமுவோ நன்றாக நீச்சலடித்துக் குளித்தான். ராமுவுக்கு நன்றாக நீந்தத் தெரியாத போதிலும் போட்டி க்காக நன்றாக நீச்சல் தெரியும் என்று சொல்லி மிகவும் ஆழமான பகுதிக்குச் சென்று விட்டான். நீச்சல் நன்றாக தெரியாததால் நீரில் மூழ்கி உயிருக்குப் போராடினான்.

இதனைக் கண்ட சோமு உடனே அங்கு சென்று ராமுவை இழுத்துக் கரைக்கு கொண்டு வந்தான். பின்னர் இருவரும் குளித்துவிட்டு திரும்பும்போது,

"உனக்குத் தெரிந்த பாடங்களை மற்றவர்களுக்குப் பயன்படுத்த நீ விரும்புவதில்லை. உன்னைப்போல் நானும் எனக்குத் தெரிந்த நீச்சலை தக்க சமயத்தில் பயன் படுத்தியிருக்காவிட்டால் உன்நிலமை என்னவாயிருக்கும் என்று நினைத்துப்பார்" என்றான் சோமு.

"இனி எனக்குத் தெரிந்த - வற்றை மற்றவர்களுக்காக நிச்சயம் பயன்படுத்துவேன். இன்றிலிருந்துநான் திருந்தி விட்டேன். என் பழைய செய்கைகளுக்காக நீ என்னை மன்னித்துவிடு என்றான் ராமு. ●

கதை - ஓவியம்
சு.கௌரீஷன்

## மாணவர் ஆக்கம்

### சில நகரங்களும் அதன் சிறப்பும்

1. இலங்கையின் சுவிற்சலாந்து என அழைக்கப்படும் இடம் : நுவரெலியா
2. கிழக்கின் சொர்க்கம் என அழைக்கப்படுவது பாசிக்குடா
3. இலங்கையின் சமாதான நகரம் என அழைக்கப்படுவது : திருகோணமலை
4. இலங்கையின் மரபுரிமை நகரம் என அழைக்கப்படுவது : கண்டி
5. இலங்கையின் புனித நகரம் என அழைக்கப்படுவது : அநுராதபுரம், கண்டி
6. இலங்கையில் தூங்காத நகரம் என அழைக்கப்படுவது : தம்புள்ள

**த.சுதாஜினி**
தரம் - 09
வற்றாப்பளை ம.வி - முல்லைத்தீவு.



முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி 1917இல் பிறந்தார்.

மாணவர் ஆக்கம்

# உயரெழுத்து உண்மைகள்

அன்பு தெய்வம் அறிந்திடு
ஆசைகள் குறைத்து வாழ்ந்திடு
இனிய வார்த்தைகள் பேசிடு
ஈகை எண்ணம் பேணிடு
உயிரெனக் கல்வி கற்றிடு
ஊருக்கு நன்மை செய்திடு
எறும்புபோல் என்றும் உழைத்திடு
ஏற்றம் வாழ்வில் பெற்றிடு
ஐந்தில் நன்றாய் வளைந்திடு
ஒற்றுமை மேலென சேர்ந்திடு
ஓடும் காலம் பொன்னென மதித்திடு
ஔவை மொழிந்தவை நினைத்திடு

**ஜெ.ஜனார்த்தனன் (ஜனா)**
நெளுக்குளம்
வவுனியா.

மாணவர் ஆக்கம்

# கிளிகள்

பச்சை நிறக் கிளிகள்
பறந்து செல்லும் கிளிகள்
மழலை மொழிபேசி எம்மைக்
கவரும் கிளிகள்
பழங்களையே விரும்பி
உண்டு வாழும் கிளிகள்
ஊரைச் சுற்றி பறந்து
தந்திரமாய் வாழும் கிளிகள்.

**(கவிப்பிரியன்) பா.தனுசன்**
தரம் - 9A,
C.C.T.M.S. வவுனியா.

# குறும்புக் குமரன்

வழங்கும்

அ முதல் ஔ தானடா



## அ அண்டங்காக்கை....

யாராவது சாப்பாட்டு விசயத்தில் அவசரப்பட்டால் “ஏன் அண்டங்காக்கை” போலப் பறக் கிறாய்? என்று கேட்பது வழக்கம் தானே. ஏன் அவ்வாறு கேட்கிறார்கள்? இந்த அண்டங்காக்கைகள், இறந்த விலங்குகளின் எஞ்சிய பகுதிகள், குப்பை கூழங்கள், பறவை முட்டைகள், எலிகள், கோழிக் குஞ்சுகள் என கண்டதை யெல்லாம் சாப்பிடும் பழக்கம் கொண்டவை.

மாமரம், சவுக்குமரம், தென்னை மரம் போன்றவற்றில் இவை கூடு கட்டுகின்றன. சில வேளைகளில் வேறு பறவைகளின் கூடுகளுக்குள் புகுந்து வெளியே மாட்டோம் எனவும் அடம் பிடிக்குமாம்.

வீட்டுக்காகங்களிடம் இருக்கும் தந்திரம் விழிப்புத்தன்மை, சேர்ந்து வாழும் பழக்கம் இவற்றிடம் கிடையவே கிடையாது.

ஏப்ரல்-செப்டம்பர் இவை களின் இனப்பெருக்க கால மாகும். தரையிலிருந்து 7 - 10 மீற்றர் உயரத் தில் கூடு கட்டுமாம். 3 - 5 வரையான முட்டைகளிட்டு அவற்றை சரியாக 18 நாட்கள் வரை அடைகாத்து குஞ்சு பொரிக்குமாம்.

அண்டங்காக்கை முட்டை ஊதா நிறமும், பச்சை நிறமும் கலந்து புள்ளிகளைக் கொண்டதாம். கர்வஸ் மக்ரோரிங்கஸ் கல்மினேற்றஸ் (Carvus Macrorhynchos Culminates) என்பது திருவாளர் அண்டங் காக்கையின் உயிரியல் பெயராகும்.


சேதி தெரியுமா?

“அண்டங்காக்கா கொண் டைக்காரி” பாட்டைப் பற்றியும் இப்பத்தியில் எழுதலாம் என்றால், ஆசிரியர் அனுமதிதர மறுத்துவிட்டார். ம்..... என்ன செய்றது?

சரி “ஆ”ற்கு வாருங்கள். ●



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்கெனடி 1917இல் பிறந்தார்




# ஜூலை மாதம் நடந்தவை

| | |
|---|---|
| 01-07-1937 | பிறப்பு, இறப்பு, திருமணம் பதிவுசெய்யும் முறை பிரிட்டனில் ஆரம்பம் |
| 02-07-1926 | அமெரிக்க இராணுவத்தில் தனி விமானப்படை ஆரம்பிக்கப்பட்டது. |
| 03-07-1916 | உலகில் முதன் முதலாக அமெரிக்காவில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது. |
| 04-07-1752 | இடி ஏற்படும்போது மின்சக்தி உண்டாகும் என்பதை பெஞ்சமின் பிராங்ளின் இன்று கண்டுபிடித்தார். |
| 05-07-1977 | பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் கொண்டுவரப்பட்டது. |
| 06-07-1885 | விஞ்ஞானி லூயி பாஸ்டர் ரேபிஸ் தடுப்பூசியை பரீட்சித்துப் பார்த்தார். |
| 07-07-1854 | "ஓம் விதியை" வகுத்த விஞ்ஞானி ஜோர்ஜ் சைமன் ஓம் ஜேர்மனியில் காலமானார் |
| 09-07-1908 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரப்பிள்ளை சிறையிலடைக்கப்பட்டார். |
| 10-07-1890 | அமெரிக்காவின் 44வது மாநிலமாக 'வையாமிங்' இணைந்தது. |
| 11-07-1798 | அமெரிக்காவில் கடற்படை அமைக்கப்பட்டது. |
| 12-07-1920 | பனாமா கால்வாய் திறக்கப்பட்டது. |
| 15-07-1918 | நிலக்கரி வாயுவில் ஓடும் பேருந்து பிரிட்டனில் வெள்ளோட்டம் விடப்பட்டது. |
| 16-07-1979 | ஈராக் ஜனாதிபதியாக சதாம் உசேன் பதவி ஏற்றார். |
| 17-07-1841 | பஞ்ச் (Punch) எனும் நகைச்சுவைப் பத்திரிகை லண்டனில் வெளியானது. |
| 18-07-1925 | ஹிட்லர் எழுதிய மெயின் காம்ப் (Main Camp) நூல் வெளியிடப்பட்டது. |
| 19-07-1976 | சீனாவில் நடந்த நில நடுக்கத்தில் ஆறுலட்சத்து ஐம்பதாயிரம் பேர் பலி. |
| 20-07-1937 | வானொலியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி மார்க்கோனி ரோம் நகரில் காலமானார். |
| 21-07-1960 | உலகின் முதல் பெண்பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதவி ஏற்றார். |
| 23-07-1875 | தையல் மெஷினைக் கண்டுபிடித்த ஐஸாக் டெரி - சிங்கர் இங்கிலாந்தில் காலமானார். |
| 24-07-1943 | அமெரிக்காவும், பிரிட்டனும், ஜேர்மனியில் விமானத்தாக்குதல் நடத்தி, 50,000 பேர் வரையில் கொன்றனர். |
| 25-07-1987 | திரு.ஆர்.வெங்கட்ராமன் இந்தியாவின் 8வது ஜனாதிபதியாக பதவி ஏற்றார். |
| 27-07-1929 | முதன்முதலாக கலர் தொலைக்காட்சிப் பெட்டி அமெரிக்காவில் அறிமுகம். |
| 29-07-1949 | முதல் முறையாக லண்டன் பி.பி.சி யில் வானிலை முன்னறிவிப்பு தொடங்கியது. |
| 31-07-1980 | பிரபல இந்திப்பாடகர் முகம்மது ர.்பி காலமானார். |



இந்தியாவின் இசைமேதை பண்டிட் ரவிசங்கர் 1920இல் பிறந்தார்.

# விஞ்ஞானி சந்திப்பு



## சார்ள்ஸ் டார்வின் ஐயாவுடன் நேர்முக அறிமுகம்

முப்பெரும் அறிவியலாளர்களுள் ஒருவரான டார்வின் உயிரியல் துறையில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர். இவர் இல்லையேல் இன்று நாம் கடவுளால் படைக்கப்பட்டவர்கள் என்றே நம்பிக் கொண்டிருப்போம்.

**ஓவியா :-** வணக்கம். இயற்கை நேசிப்பின் பிதாமகனே! டார்வின் ஐயா!

டார்வின் :- வணக்கம், ஓவியா! என்னை ஒரு வழிபண்ணுவதற்காகத்தான் வந்திருக்கிறாய் போலிருக்கிறது மகனே!

**ஓவியா :-** **மனித குலத்தின் சிந்தனையை மாற்றுவழியில் திருப்பி, பூமியில் உயிரின் தோற்றம், வளர்ச்சி பற்றிய தெளிவை ஏற்படுத்தியவர் தாங்கள். தங்களுக்கு முன்னுள்ளவர்களின் உயிரின தோற்றம் பற்றிய கோட்பாடு பற்றி சற்றுக் கூறுங்களேன்?**

டார்வின் :- ஆம் மகளே! நான் கூட சிறுவனாக இக்கும் காலங்களில் இக் கொள்கையையே நம்பினேன். இவர்கள் இப்பூமியும் உயிரிகளும் கடவுளால் படைக்கப்பட்டது என்றார்கள். இதையே நான் ஆதாரங்களுடன் மறுத்தேன்.

அவர்களது விசேட படைப்புக்கொள்கையை மறுத்த எனது பரிணாம வளர்ச்சி கொள்கையை முன்வைத்தேன்.

**ஓவியா :-** **ஐயா, தங்களது பரிணாமக் கொள்கையை பற்றிச் சற்றுக் கூறுங்களேன்.**

டார்வின் :- இந்தப் பூமியில் உயிரினங்கள் பரிணமித்தவையே அன்றி படைக்கப்பட்டவை அல்ல. அதாவது மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் மிக எளியவகை உயிரினங்களிலிருந்தே தோன்றியவை. இன்று நாம் காணும் மனிதன், ஆடு, மாடு, நாய், மரம், செடி, கொடி போன்றவை இப்போதுள்ளது போலவே தொடக்கத்தில் இருக்கவில்லை.

**ஓவியா :-** **அப்படி என்றால் இனிவரும் காலங்களில் மனித இனம் இந்தப் பூமியில் இல்லாது போய்விட வாய்ப்பிருக்கிறதா?**

டார்வின் :- ஆம், மகளே! அதிலென்ன சந்தேகம். உயிரிப் பொருட்கள் என்பவை இரசாயனப் பொருட்களின் சேர்க்கையே ஆகும்.இரசாயனப் பொருட்களில் நடைபெறும் மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருப்பதுபோல் உயிர் பொருட்களது மாற்றமும் உறுதியானது.

ஆகவே மனித இனம் மறைந்து புதிய இனம் பூமியில் வருவது ஒன்றும் அதிசயமான விடை அல்ல.

**ஓவியா :-** **தங்கள் வாழ்வில் மறக்கமுடியாத நபர் என்று கேட்டால் யாரைக் குறிப்பிடுவீர்கள்?**



புகழ்பெற்ற பாடகர் பீம்சென்ஜோஷி 1922இல் பிறந்தார்.

டார்வின் :- எனது தகப்பனார். நண்பன் தோமஸ் ஹென்றி ஹெக்ஸ்லீ எனது மனைவி போன்றோரைக் குறிப்பிடலாம். இதில் எனது நண்பன் என் பரிணாமக் கொள்கைக்கு பக்கபலமாக நின்று பாதிரிமார்களிடமும், பைபிளிடமும், தேவாலயங்களிடமிருந்தும் என் கொள்கையை மீட்டெடுத்தவர். சுமார் 25 வருடகாலம் போர். மதத்துக்கும் எனது கொள்கைக்குமிடையே நிகழ்ந்தது. போரில் வெற்றிபெற்றது பரிணாமக் கோட்பாடே.

ஓவியா :- **25 ஆண்டுகள் நடந்த போரா?**

டார்வின் :- ஆம் மகளே! நான் எனது பரிணாமக் கொள்கையை சான்றுகளுடன் சமர்ப்பித்தும்கூட இங்கிலாந்தில் 25 வருடங்களாக பெரும் போர் மூண்டது எனலாம். எனது கொள்கைக்கும் கொள்கை ஆதரவாளர்களுக்கும் எதிராக மதவாதிகள் போர் தொடுத்தனர். அடாவடித்தனமான போர், ஆதாரங்களற்ற போர்கள். இவை எல்லாவற்றையும் முறியடிப்பதில் எனக்கு துணைபுரிந்த உற்ற நண்பன் தோமஸ் ஹென்றி.

டார்வினா? கடவுளா?

நாம் ஆதாம்பிள்ளைகளா? மனிதக்குரங்கின் பிள்ளைகளா?

அறிவியலா? பைபிளா?

கடவுளா? கொரில்லாவா?

எல்லாக் கேள்விகளுக்கும் நியாயமான விடை கிடைத்தது. ஒரு சந்தர்ப்பத்தில் பீகிள் கப்பலின் தலைவராக இருந்த பிட்ஸ் ராய் என்பவர் நான் ஒரு நச்சுப் பாம்பைவிட

## குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ தானடா*



### ஆ ஆங்கிலம்

ஆங்கில மொழியை பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பழைய ஆங்கிலம் (Old English) இடைக்கால அங்கிலம் (Middle English) நவீன ஆங்கிலம் (Modern English) என்பவையே அவை. 1500ம் ஆண்டுக்குப் பிற்பட்ட ஆங்கிலமே நவீன ஆங்கில மாகும்.

ஆங்கிலத்தின் தாயகமான பிரிட்டனில் முன்பு கெல்ட் (Celt) எனும் மொழிதானாம் பேசப்பட்டது. கி.பி. 5ம் நுற்றாண்டிலிருந்துதான் ஆங்கிலம் புழக்கத்திற்கு வந்திருக்கிறது. பழைய ஆங்கிலத்தில் பாவிக்கப்பட்ட 85% சொற்கள் இன்றைய ஆங்கிலத்தில் பாவிக்கப் படுவதில்லையாம்.

அதிகளவான சொற்களை தன்னகத்தே கொண்ட இம்மொழிக்கு "கடன்கார மொழி" என்று பெயராம். காரணம் தெரியுமா? இது ஏனைய மொழிகளில் இருந்து ஏராளமான சொற்களைக் கடன் வாங்கி வைத்திருக்கிறதாம்.


ஆங்கில மொழியில் ஒரு வசதி தெரியுமா? எப்படித்தான் பிழை பிழையாகப் பேசினாலும் விளங்கக்கூடியது இந்த அங்கில மொழி.

ஓகே. வீ ஷால் மீற் எனதர் கொலம். மன்னிக்கவும். இன்னொரு பத்தியில் சந்திப்போம். ●



விவசாய விஞ்ஞானியான M.S. சுவாமிநாதன் 1925இல் பிறந்தார்.

கொடியவரை (டார்வின்) வளர்ந்துவிட்டேனே! என தனது மதவெறியால் கூறி இருக்கிறார்.



ஓவியா :- **நீங்கள் ஒரு நாஸ்திகரா கடவுளை மறுக்கிறீர்களா?**

டார்வின் :- நான் மதகுரு ஆவதற்கு கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றவன். நாற்பது வயதுவரை ஆஸ்திகன். கடவுளை நம்பியவன். நாற்பது வயதுக்குப்பின் தெளிவடைந்து விட்டேன். முழுமையான தெளிவை பெற்றுவிட்டேன். உண்மையை உணர்ந்து கொண்டேன். முழுமையான நாஸ்திகராக வாழ்ந்தேன்.

உண்மையில் என்னை நாஸ்திகர் என்று கூறுவதைவிட அக்னோஸ்டிக் (Agnostic) என்று சொல்வதையே பெரிதும் விரும்புகிறேன். (நாஸ்திகன் பணிவோடு வாதிடுபவனாக இருந்தால் அவன் அக்னோஸ்டிக்)

ஓவியா :- **தங்களது "அக்னோஸ்டிக்" எனக்கு விளங்கவில்லையே?**

டார்வின் :- அதாவது கடவுள் இல்லை என்பது சாதாரண பாமர மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, ஜீரணிக்க முடியாத ஒரு புதிய தத்துவம். இதை பாமர மக்கள் மீது திணிப்பது தேவையற்றது. கல்வியாளர்கள் பண்பட்ட சிந்தனையுடையவர்கள் இதை அறிவு பூர்வமாக ஆராய்ந்து ஏற்கட்டும். இதை நாமாக வந்து வாதிட்டு ஆர்த்திகர்களை தாக்குட'வராக இல்லாமல் இருப்பதையே "அக்னோஸ்டிக்" என்கிறேன். இதைச் சொல்பவர்களை "நாத்திகர்" எனக் குறிப்பிடலாம்.

ஓவியா :- **நீங்கள் இந்த இளைய சமுதாயத்தினருக்கு ஒரு முன்னுதாரணமானவராக காட்ட விரும்புகிறீர்கள்?**

டார்வின் :-
1. வகுப்பறையில் எந்தவிதத்திலும் சிறப்பான ஒரு இடத்தைப் பெறாதவர்.
2. தலைமையாசிரியரால் பயனற்ற மாணவர் என்றழைக்கப்பட்டவர்.
3. கல்லூரியில் மதப்பாடங்களில் மட்டும் பட்டம்பெற்றவர்.
4. மருத்துவப் படிப்பை இரு ஆண்டுகள் மட்டும் படித்து தொடர முடியாமல் இடைநடுவில் விட்டவர்.
5. தந்தையிடமிருந்து எதற்கும் உருப்படாதவர் என்று பெயர் பெற்றவர்.
6. இளமையில் எந்தவித சிறப்பு வெளிப்பாடுகளையும் காட்டாதவர்.
7. செம்மையான கேட்கும் தகவைப் பெறாதவர்.
8. 40 ஆண்டுகள் நாளும் நோயால் இன்னலுற்றவர்.

இவரைத்தான் நான் முன்னுதாரணமாக காட்ட விரும்புகிறேன்.

- அடுத்த இதழிலும் தொடரும்.....



முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் 1926இல் பிறந்தார்.




# LET'S LEARN ENGLISH

கடந்த பூங்கனியில் வரும் தொடரோடு Infinitive (இன்பினிடிவ்) என்றும் எச்சங்கள் அதாவது Verbs (வினைச் சொற்களின் முதலாம் பகுதியுடன் சேர்ந்து வாக்கியங்கள் அமைக்க எப்படி உதவுகின்றன என ஆராய்ந்து வருகிறோம்.

இப்போது இல் Infinitives (எச்சங்கள்) Want, Like, Need, Ought

| | | |
|---|---|---|
| Want | - | ஆசை / விரும்பும் சொற்கள் |
| Like | - | பிரியப்பட்டு |
| Need | - | தேவைபடு |
| Ought | - | வேண்டிய நிலையில் இரு |



I want to watch the Television
நான் தொலைபேசி பார்க்க விரும்பம் கொள்கிறேன்.

She wants to talk to you
அவள் உன்னொடு கதைக்க விருப்பம் கொள்கிறாள்.

They want to s top the war
அவர்கள் யுத்தத்தை நிறுத்த விருப்பம் கொள்கிறார்கள்.

Government wants to maintain the peace.
அரசு சமாதானத்தைப் பேணிப்பாதுகாக்க விருப்பம் கொள்கிறது.

You want to buy a Poonkani
நீ ஒரு பூங்கனியை வாங்க விருப்பம் கொள்கிறாய்.

To go, To come, To learn போன்ற மூன்று வினை எச்சங்களை போட்டு கருத்துக்களைப் பாருங்கள்.

You want to go
நீ போக விருப்பம் கொள்கிறாய்.

You want to come
நீ வர விருப்பம் கொள்கிறாய்.

You want to learn
நீ கற்க விருப்பம் கொள்கிறாய்.





இங்கிலாந்தின் மகாராணி இரண்டாம் எலிசபெத் 1926இல் பிறந்தார்.

இனி Likeப் பார்ப்போம்

I like to read Poonkani
நான் பூங்கனி வாசிக்கப் பிரியப்படுகிறேன்.

She likes to meet you
அவள் உன்னை சந்திக்கப் பிரியப்படுகிறாள்.



He likes to visit there
அவர் அங்கே பார்வையிட பிரியப்படுகிறார்.

They like to fulfil their aim
அவர்கள் தமது குறிக்கோளை நிறைவேற்றப் பிரியப்படுகிறார்கள்.

People like to live happy.
மக்கள் சந்தோசமாக வாழ பிரியப்படுகிறார்கள்.



இனி Needயைப் பார்ப்போம்

I need to go
நான் போக தேவையுள்ளது.

She needs to wait
அவள் காத்திருக்க தேவையுள்ளது.


He needs to earn hard
அவர் கடினமாக சம்பாதிக்க தேவையுள்ளது.

They need to aftend in that meeting
அவர்கள் அந்த கூட்டத்தில் சமுகமளிக்க தேவையுள்ளது.

இனி Oughtயைப் பார்ப்போம்.

I ought to write some articles in Poonkani Magazine
நான் சில கட்டுரைகள் பூங்கனி சஞ்சிகையில் எழுத வேண்டிய நிலையுள்ளது.

You ought to wait
நீ காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது.



She ought to look for a job
அவர் ஒரு வேலை தேடவேண்டிய நிலையுள்ளது.

He ought to stay there
அவர் அங்கு தங்க வேண்டிய நிலையுள்ளது.

We ought to displace from here.
நாம் இங்கிருந்து இடம்பெற வேண்டிய நிலையுள்ளது.

கவனிக்கவும் :-

He, she, It போன்ற ஒருமை எழுவாய் வாக்கியத்தில் - Wants / needs likes முறையே "S" எழுத்துடன் சேர்ந்து வரவேண்டும்.

I you மற்றும் பன்மை எழுவாய் வாக்கியங்களுக்கு சேரவேண்டியதில்லை.



பிரபல பாடகி லதா மங்கேஸ்கார் 1928இல் பிறந்தார்.


S.S.வாசன் எழுதும்

# "உலக வரலாறு"

உலக வரலாறு! மிக நீண்டது! சொல்வதற்கு பல துறைகள் உண்டு! எல்லாவற்றையும் கூறிவிடுவது எமது நோக்கமல்ல. உலகின் முக்கிய நிகழ்வுகள்! புவியியல், பொருளியல், அரசியல், விஞ்ஞானம், கலை மனித சாதனைகள் என பல்துறை களஞ்சியமாக இப்பகுதி உங்களை கவரவிருக்கிறது! புவிதோன்றிய காலம் முதல் இன்றுவரை உள்ள காலகட்டங்கள் உங்கள் முன் கொண்டுவரப்படும். இவைகள் கட்டுரைகளின் அளவுகளில் நீளத்தை ஏற்படுத்தாது இருக்க முயற்சி செய்வோம்!

இதனால் விடயங்கள் சில இடங்களில் சுருக்கமாகவே அமையும்.

புவி! சூரியனில் இருந்து மூன்றாவதாக உள்ளகோள! புவியை தட்டை எனக்கருதிய காலமுண்டு.





கம்போடியாவின் கொடுங்கோலாட்சியாளன் பால்பாட் 1928இல் பிறந்தார்.

எமது ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள உயிர்க்கோளம் இதுவாகும். புவியின் தோற்றம் பற்றி உராய்வு விசைக் கருதுகோள், பெருக்கு விசைக்கருது கோள், வான்புகையுருக் கருதுகோள் என வேறுபட்ட கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டாலும் எல்லாக் கருதுகோள்களுமே சூரியனில் இருந்தே புவி தோன்றியது. என்பதில் எல்லோரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர்.

இற்றைக்கு 460 கோடி ஆண்டுகளுக்கு முன் புவி தோன்றியது! தோன்றியபோது மிகப்பெரிய தீப்பிழம்பாகக் காணப்பட்டது. பின்னர் குளிர்வடைந்து இன்றைய திண்ணிய நிலையைப் பெற்றது.

கண்டங்கள் ஆரம்பத்தில் பஞ்சியா என்ற பெயரில் நன்றாக இருந்து பின்னர் பிளவுற்றுச் சென்று இன்றைய நிலையைப் பெற்றன என்பது புவியியலாளரின் கண்டுபிடிப்பு அல்பிரட் வெகினர் என்ற ஜேர்மனிய புவியியலாளர் **கண்டநகர்வுக் கோட்பாட்டின்** மூலம் இதனை விளக்கியுள்ளார். கார்போனிக்பரஸ் காலமான பெருங்காடுகள் தோன்றி மறைந்த காலத்தில் கண்டங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தது எனவும் இயோசின் என்னும் காலத்தில்

## குறும்புக் குமரன்
**வழங்கும்**

*அ முதல் ஃ தானடா*




## இ இரத்ததானம்

முதலாம் உலக மகாயுத்தம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த 1918ம் ஆண்டுக் காலப்பகுதி அது. போரில் காயமடைந்த ஏராளமான வீரர்களுக்கு இரத்தம் தேவைப்பட்டது. இச் சூழ் நிலையில்தான் ஒஸ்வேல்ட் எச். றொபேட்சன் (Oswald Robertson) என்பவர் .இரத்ததானம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தினார்.

ஒருவருடைய உடலில் இருந்து இரத்தத்தை எடுத்து, தூய்மைப் படுத்தப்பட்ட குடுவையில் சோடியம் சிற்றெற் (Sodium Citrate) எனும் இரசாயனத்துடன் கலந்து பாதுகாக்கப்படுகிறது.

மனித இரத்தம் நான்கு வகை என்பது உங்களுக்குத் தெரியும். இதனைக் கண்டுபிடித்தவர் ஆஸ்திரிய நாட்டு மருத்துவரான கார்ல் லாண்ட் ஸ்ரீனர் (Karl Landsteiner) என்பவர். 1900ம் ஆண்டு இதனைக் கண்டுபிடித்தார்.



இன்றுமொன்று தெரியமா? முதலாவது இரத்தவங்கி (Blood bank) அமெரிக்காவின் சிகாகோ நகரிலுள்ள குக் கன்றி வைத்திய சாலையில் (Cook country hospital) 1937ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இரத்ததானம் செய்வதால் எத்தனையோ நன்மைகள் இருக்கின்றன. செய்யுங்கள்.



ஜேம்ஸ்பாண்ட் நடிகர் லான்ஹெனரி 1930இல் பிறந்தார்.

பஞ்சியா என்ற கண்டம் இரண்டாக பிளவுற்று வடக்கே அங்காராலாந்து, தெற்கே கொண்டுவானாலாந்து எனப் பிரிந்து சென்றன.

அங்காராலாந்து அல்லது பொரேசியாவில் இருந்து அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோ-அசியா கண்டங்களும் கொண்டுவானாலாந்திலிருந்து இந்தியா, அவுஸ்ரேலியா, அண்டார்டிகா கண்டங்களும், நடுவே தோன்றிய ரெத்தீஸ் அல்லது பந்தலாசாக் கடலில் இருந்து இந்து, பசுபிக், அட்லாண்டிக் சமுத்திரங்கள் தோன்றின எனவும் வெகினர் விளக்கிச் செல்கிறார். கண்டங்கள் தோன்றிய விதம்பற்றி விளக்கிய மிகமுக்கிய கோட்பாடு இதுவாகும்.



புவியில் நீர் உயிர்வாயு என்பன காணப்பட்டதல்லவா? இது உயிர்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. நீரிலே உயிரினங்கள் முதலில் தோன்றின. இந்த உயிரினங்களின் தோற்றம் பற்றிய நீண்ட கதை உண்டு. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி, புவிச் சரிதவியல் காலகட்டங்கள் என்பன பற்றி அறிந்துகொள்வது உலகவரலாறு படிக்கும் உங்களுக்கு அவசியமானது. இதன்மூலமே மனிதனின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி நாம் அறிய முடியும் இல்லையா! உயிரினங்களின் தோற்றம், டார்வினின் பரிணாம வளர்ச்சி கோட்பாடு என்பனபற்றி அடுத்த இதழில் பார்க்கலாம்.

- வரலாறு வளரும்



பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 1930இல் பிறந்தார்.




கே.ஆர்.ஆர்.

கனி - 3ல் - ரகசிய புதையலைப் பற்றி அறிய அருண் பாட்டியிடம் விபரம் கேட்கிறான். ஆனால் பாட்டியோ அவற்றைக் கூற மறுக்கிறாள். இறுதியில் அந்த ரகசியப் புதையலால் உனது உயிருக்கு ஆபத்து என்கிறாள் பாட்டி.

இனி....

4

பாட்டி சொன்னதைக் கேட்ட அருணுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"பாட்டி தயவு செய்து அந்த ரகசிய புதையலைப் பற்றிச் சொல்லுங்க, மாரடைப்பு வந்து இறந்த தாத்தாவுக்கும், பாம்பு கடித்து இறந்துபோன எங்க அம்மாவுக்கும் அந்த ரகசியப் புதையலுக்கும் என்ன சம்மந்தம்?"

"அருண் மனச திடப்படுத்திக் கொள்ளப்பா, உன்னோட அம்மா பாம்பு கடிச்சு இறக்கல, நீ குழந்தையா இருக்கிறப்போ ஒருநாள் உங்க அம்மா இந்த மாவூர் கிராமத்திற்கு வந்தா. அவளும் உன்னைமாதிரியே காடு சுற்றிப் பார்க்கப்போனப் அப்பவும் அந்த பெண்குரல் அலறும் ஓசைகேட்டு, அவளைக் காப்பாற்றப்போய்....."

"காப்பாற்றப்போய்..... என்ன பாட்டி ஒரே மர்மமா இருக்கு, அதுக்குப் பிறகு என்ன நடந்தது?"

"என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியாது, இரண்டு நாட்கள் கழித்து உன் அம்மாவின் சடலம்தான் கிடைத்தது"

"ஓ...மை...காட், சரி பாட்டி அந்த ரகசிய புதையலால என்ர உயிருக்கும் ஆபத்தா?"

"ஆமா அருண். நீ பிறக்கும்போது உனது ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர் உனக்கு பதினைந்தாவது வயது தொடங்கும்போது அந்த ரகசிய புதையலால ஆபத்து இருக்குதுன்னு சொன்னார்."

"என்ர பர்த்டேக்கு இன்னும் பத்து நாட்கள்தானே இருக்குப் பாட்டி"



பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி ஹொரசான் அஸினோ 1933இல் பிறந்தார்.

“அதுதான் ராசா எனக்கும் கவலையா இருக்கு”

“சரிபாட்டி நடக்கிறது நடக்கட்டும், நான் அந்த ரகசிய புதையலை எடுக்கப் போறேன்”

“என்ன அருண் சொல்ற?”

“யேஸ் பாட்டி. இப்படியான கதைகளை நான் கதைப் புத்தகங்களில் நிறையப் படிச்சிருக்கிறன். அதால எனக்கு ரகசிய புதையலப்பற்றி அறிய ஆவலாயிருக்கு”

“வேண்டாம் அருண் இது ஆபத்தான விளையாட்டு. நீ பேசாம ஊருக்குப் போ, இங்க இருந்தா ஆபத்து”

“இல்ல பாட்டி, நான் அந்த ரகசிய புதையலப்பற்றி ஆய்வு செய்யப் போகிறேன். எனக்கு நீங்கதான் ஹெல்ப் பண்ணனும்”

“நான் உதவி செய்யட்டுமா?”

பாட்டியும் அருணும் ஒருகணம் திடுக்கிட்டனர். குடிசைக்கு வெளியே இருந்து வந்த குரல் யாருடையது?

“பயப்பிடாதீர்கள் அது நான் தான்!”

என்று கூறியவாறு குடிசைக்குள் நுழைந்தான் ஒருவன்.

“யார் நீ? உன்னை இதற்கு முன்பு நான் பார்த்ததேயில்லை”

பாட்டி அவசரமாகக் கேட்டார்.

வந்தவன் பெரிதாகச் சிரித்தான்.

“நான் யார் என்பது முக்கியமில்லை. நானும் ரகசியப் புதையலைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். அருணை என்னோடு அனுப்புகிறீர்களா?”

## குறும்புக் குமரன்

வழங்கும்

அமுதல் ஃதானடா



## ஈ ஈபிள் கோபுரம்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ‘சம்டி மார்ஸ்’ (Chamde Mars) எனும் இடத்திலிருக்கிறது, ஈபிள் கோபுரம்.

30 சதுர அடித் தளத்தில் உயரத்தில் செங்கற்களால் சுவர் கட்டி, அதன் மேல் 7,300 தொன் இரும்பையும், உருக்கையும் பயன் படுத்தி 300 மீற்றர் உய ரத்தில் இக்கோபுரம் கட்டப்பட்டதாம்.

1889இல் இதனைக் கட்டும்போது இதற்கான செலவு வெறும் ஒரு கோடியே இருபது லட்சம் மட்டும்தானாம். அதுவும் முதலாவது வருடத்திலேயே நுழைவுக் கட்டணம் மூலமாக இத் தொகையை சம்பாதித்து விட்டார்களாம்.

அலெக்ஸாண்டர் கஷ்டர் ஈபிள் என்பவரே இக்கோபுரத்தைக் கட்டியிருக்கிறார். 1832இல் பிறந்த இவர் 1923 டிசம்பர் 27இல் காலமானார்.

ஈபிள் கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்த்தால் 137km சுற்றளவுக்கு காட்சிகள் தெரியுமாம்.

எல்லாஞ்சரிதான், அந்த ஒருகோடியே இருபது லட்ச ரூபாயைக் கொண்டு இக்காலத்தில் இப்படியொரு கோபுரத்தை....... வேண்டாம்! கற்பனையே பண்ணிப் பார்க்க முடியவில்லை. ●



ஓஷோ எனப்படும் சர்ச்சைக்குரிய சாமியார் ரஜனீஸ் 1937இல் பிறந்தார்.

“ஆமா அங்கிள் நானும் வாரேன்.”

சந்தோஷமாக அருண் கூற,

“வாயை மூடு அருண். இவனை யார் என்றே தெரியல.... ஏய் நீ யார்? உனக்கு என்ன வேணும்?”

“கேட்டா தருவீங்களா எஜமானி அம்மா?”

மீண்டும் சிரித்தவாறே வந்தவன் கேட்க அருணுக்கு ஆச்சரியம்.

“எதற்காக இவன் பாட்டியை எஜமானியம்மா என்று அழைக்கிறான்”

தனக்குள் எண்ணிக்கொண்டான் அருண்.

“என்னதம்பி யோசிக்கிறாய், என்னடா இவன் பாட்டியை எஜமானியம்மா என்று அழைக்கிறான் என்றா? நூறுகோடி பெறுமதியான ரகசியப் புதையலின் உரிமையாளரான உன்னோட பாட்டியை வேறு எப்படி அழைக்கலாம்?”

என்று கேட்டவன் மீண்டும் பெரிதாகச் சிரிக்க, கோபம் அடைந்த பாட்டி,

“இப்ப எதற்காக இங்கே வந்தாய். மரியாதையாக வெளியே போ”

என வந்தவனை விரட்ட, அருண் கேட்டான்

“என்ன பாட்டி அந்த அங்கிள் சொல்ற மாதிரி ரகசியப் புதையல் உங்களோடதா?”

“அதுமட்டுமில்ல தம்பி அருண், அந்த ரகசியப் புதையலின் பெட்டகத் திறப்பும் உன்னோட பாட்டியிடம்தான் இருக்கு”

“இருந்தால் இப்ப உனக்கென்ன, மரியாதையாக வெளியேபோ”





தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி F.W.D கிளார்க் 1936இல் பிறந்தார்.

பாட்டி கோபத்தில் வெடிக்க, வந்தவன் உடனே அங்கிருந்து வெளியே போய்விட்டான்

பேருந்து புறப்படத் தயாரானது. பாட்டி கையசைத்து விடை கொடுத்தார்.

"கவனமாகப் போ அருண். போய் கடிதம்போடு"

பேருந்து புறப்பட்டது.

ஜன்னலோரமாக அமர்ந்திருந்த அருணின் சிந்தனை நேற்று நடந்த சம்பவத்தையே சுற்றிவந்தது.

"பாட்டியோடு பேசிக்கொண்டு இருக்கும்போது திடீரென்று உள்ளே வந்தவன் யார்? அவனை எதற்காகப் பாட்டி விரட்டினார்? பாட்டிதான் அந்த ரகசியப் புதையலின் உரிமையாளர் என்று வேறு அவன் சொன்னானே!"

எதுவுமே புரியாமல் அருண் குழம்பிக்கொண்டிருக்க திடீரென்று பேருந்து நின்றது.

யாரோ இரண்டு இளைஞர்கள் பேருந்துக்குள் ஏறினார்கள். இருவரது கைகளிலும் துப்பாக்கிகள்.

"யாரும் அசையக்கூடாது. இதில அருண் யார்? மரியாதையா எழும்பு"

இருவரில் ஒருவன் சத்தமாய்க் கேட்க,

பயணிகள் அனைவரும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

பேருந்துக்குள் அமைதி நிலவியது.

"யார் அருண்? மரியாதையா கைய உயர்த்து"

அவர்கள் மீண்டும் கேட்க,

நிலைமையைப் புரிந்துகொண்ட அருண்,

"நான்தான்"

என்று எழுந்து நிற்க,

அவனைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு வந்த அவர்கள், பேருந்தைப் போகுமாறு சைகை காட்ட, பேருந்து புறப்பட்டது.

பாதையோரமாக இருந்த காட்டுப் பகுதிக்குள் அருணைத் தள்ளிக் கொண்டு போனார்கள் அவர்கள்.

"யார் நீங்கள்? எதற்காக என்னைக் கடத்திக்கொண்டு போகிறீர்கள்?"

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அருண் கேட்க,

"பேசாமல் நட, கொஞ்ச நேரத்தில் எல்லாம் தெரியும்."

சிறிது தூரம் நடந்து போனார்கள்.

எதிரே ஒரு பாழடைந்த மண்டபம். பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அருணை அதற்குள் தள்ளிக்கொண்டு போனார்கள்.

உள்ளே இருட்டாக இருந்தது.

ஓரிடத்தில் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவன் அருணிடம் வந்தான்,

"இவளைத் தெரியுமா?"

"யாரை?"

"கூட்டிட்டு வாங்கடா அவளை"

இருவர்போய் ஒரு சிறுமியை அழைத்து வந்தார்கள்.

வந்தவள் ஆர்த்தி,

மிகவும் பயந்துபோயிருந்தாள்.

அருண் அவளைப் பார்த்தான். இதற்கு முன் அவளை அருண் கண்டதேயில்லை!

"எனக்குத் தெரியாது"

என்று அருண்கூற,

எதிரே நின்றவன் பெரிதாகச் சிரித்துவிட்டுக் கூறினான்,

"இவள் உன்னோட தங்கச்சி"

- தொடரும்



கேரளாவின் கதக்களி நாட்டியக் கலைஞர் பரிக்மஹாராஜ் 1937இல் பிறந்தார்.

# ஐ! அப்படியா?

☺ **ப**கவத் கீதையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஒரு ஆங்கிலேயராம். சார்ள்ஸ் வில்கின்ஸ் என்பது அவரது பெயர். 1785இல் இவர் மொழிபெயர்த்தார்.

☺ **எ**ந்தப்பெயருடைய மனிதர்கள் உலகில் அதிகம் வாழ்கின்றனர் தெரியுமா? ஜோன் - ஊஹூம், பீட்டர் - இல்லவே இல்லை, மேரி - கிடையாது, அப்போ சரியான விடை - முகம்மது.

☺ **உ**ங்களுக்கு எத்தனை மொழிகள் தெரியும்? தமிழே சரியாகத் தெரியாது என்கிறீர்களா? சரி விடுங்க! விஷயம் இதுதான். ஜோர்ஜ்கம்பெல் என்பவருக்கு 54 மொழிகள் தெரியுமாம். (அடேயப்பா!) இவ்வளவு மொழிகளையும் இவர் எப்படிக் கற்றார் தெரியுமா? BBC வானொலியின் வெளிநாட்டுச் செய்திச் சேவையில் இவர் பணிபுரிந்தாராம். அப்போதுதான் இவற்றைக் கற்றிருக்கிறார்.

☺ **ம**னிதனின் இடதுகாலைவிட, வலதுகாலின் நீளம் சற்று அதிகமானது.

☺ **அ**மெரிக்காவில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனோதத்துவ வைத்தியர்கள் உள்ளனராம். எதற்காக என்கிறீர்களா? அங்குதானாம் மனநோயாளிகளும் அதிகமாம். சராசரியாக 328பேருக்கு ஒரு வைத்தியர் என்ற ரீதியில் அங்கு மனோதத்துவவைத்தியர்கள் உள்ளனராம்.

☺ **பூ**மியின் எடை எவ்வளவு தெரியுமா? 6,600,000,000,000,000,000,000, kg இத்தொகையை யாராவது எழுத்தில் எழுதிக் காட்ட முடியுமானால் முயற்சித்துப் பாருங்கள்.

## குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ வரை*



## உ உமறுப்புலவர்

**யா**ரிந்த உமறுப் புலவர்? சீறாப்புராணம் எனும் அளப்பெரும் காப்பியத்தை எமக்களித்தவர்தான் உமறுப் புலவர். இன்னும் முதுமொழி மாலை, செய்தக்காதி நொண்டி நாடகம், சீதக்காதி திருமண வாழ்த்து போன்றவையும் இவர் எழுதிய நூல்களாகும்.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1642இல் இவர் பிறந்தார்.

கடிகை முத்துப் புலவர் என்பவரிடம் உமறுப்புலவர் தமிழ்கற்றார். இவர் எழுதிய சீறாப்புராணம் 92 படலங்களையும், 5028 விருத்தப் பாக்களையும் கொண்டன.

ஒருதடவை வாலை வாருதி என்ற ஆணவம் மிகுந்த புலவரிடம், கவிதையால் மோதி வெற்றிபெற்றாராம் உமறுப் புலவர்.

தனது 61வது வயதில் 1703இல் காலமான உமறுப்புலவரின் கல்லறை இன்றும் எட்டயபுரத்தில் இருக்கிறதாம். ●



புகழ்பெற்ற விஞ்ஞானி ஸ்ரீ.:பன்ஹாக்கிங் 1942இல் பிறந்தார்.

# கோபியின் புதிர்ப்போட்டி

## இலக்கம் 04

கோபியின் புதிர்ப்போட்டி இல. 02ல் "குதிரைக்கு கொம்பு இருந்தால் என்ன நடக்கும்?" என்று கேட்டிருந்தோம். நீங்கள் அனுப்பி வைத்த விடைகளை வாசித்து எமக்கு வியப்புத் தாங்கமுடியவில்லை. எவ்வளவு கற்பனை வளம் உங்களிடம் இருக்கிறது! பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

**பரிசு பெறுவோர்**

① **V.A. தனுசன் :** தரம் - 9A, சீ.சீ.ரி.எம்.எஸ், வவுனியா.

**இவரது பதில் :-**

*"குதிரை நடக்கும்போது கொம்பும் குதிரையுடன் கூடவே செல்லும்"*

**மேலும் பொருத்தமான விடைகள் எழுதி பரிசு பெறுவோம்**

2. **த.நர்மதா** : மரக்காரம்பளைவீதி, கணேசபுரம், வவுனியா.
3. **சகீட் பாத்திமா பஸ்னாஸ்** : தரம் - 3E, வ/இ.ம.ம.வி
4. **வே.பிரதீபன்** : புதுக்குடியிருப்பு ம.வி
5. **ப.சாநுஜா** : தரம் 3D, வ/இ.ம.ம.வி
6. **வீ. தனோஜனா** : தரம் 5C, வ/சைவப்பிரகாசா கல்லூரி, வவுனியா.
7. **மூ.தர்ஷினி** : தரம் 10, வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி
8. **பா.லினோஜன்** : இல. 101/27, பட்டகாடு, வவுனியா.
9. **ம.அருட்கலாநிதி** : தரம் 13, ம/புனித சவேரியார் ஆ.தே.பா. மன்னார்.
10. **த.யுனித்தா** : தரம் - 8B, வ/நெடுங்கேணி ம.வி, நெடுங்கேணி.

**இப் பத்துப்பேருக்கும் பரிசாக இரா. நடராசன் எழுதிய "ஆயிஷா" குறுநாவல் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.**



தமிழறிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 1901இல் பிறந்தார்.

# இம்மாதக்கேள்வி

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்
இப்பழமொழியை தற்காலத்திற்கேற்றவாறு மாற்றி புதுமொழியாக எழுதுக"

## விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**கோபியின் புதிர்ப்போட்டி-04**
**பூங்கனி,**
**இல-141, திருநாவற்குளம், வவுனியா.**

எங்கே உங்கள்
கற்பனைக் குதிரையை
தட்டிவிடுங்கள்.
பதில்களை எழுதுங்கள்.....
பரிசுகளை வெல்லுங்கள்.....

வெற்றிபெற்ற பதில்களும்
வெற்றிபெற்றோர் விபரமும்
செப்டம்பர் மாத பூங்கனியில்
வெளியாகும்.

**பரிசு என்ன?**
மிகச் சிறந்த பதில்கள்
எழுதும் 10 பேருக்கு
முல்லாவின் நகைச்
சுவைக் கதைகள்
நூல் பரிசாக
அனுப்பிவைக்கப்படு

**முடிவுத் திகதி 30-07-2005**


வெளிநாட்டில் உங்கள் உறவுகள் அனுப்பும் பணத்தை
ஓரிரு நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமா?
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# கோபி ஏஜென்சி

இல - 33,
மில்வீதி,

உலகெங்கிலிமிருந்தும் விரைவாகப் பணத்தைப்
பெற ஒரே வழி

**WESTERN UNION | மணி டிரான்ஸ்ஃபர்**

Western Union ன் அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
**கோபி ஏஜென்சி**
**இல-33, மில் வீதி,**
**வவுனியா.**

**10 இலக்கங்களுடன் நாடுங்கள்**

T.P No : 024 - 2222411, 024 - 4589225, 024 - 2224351

2004ம் ஆண்டிலும் மிகச் சிறந்த முகவருக்கான
விருதினையும் பெற்று வெற்றி நடைபோடுகிறது கோபி ஏஜென்சி.





ஜேம்ஸ்பாண்ட் கதைகளின் கர்த்தா அயன்பிளமிங் 1908இல் பிறந்தார்.

# பொது அறிவு

சாகித்தியன்

இலங்கையிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் நான்கு பிரிவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



01) AB வகைப்பாடசாலைகள்

02) 1C வகைப்பாடசாலைகள்

03) 2ஆம் வகைப்பாடசாலைகள்

04) 3 ஆம் வகைப்பாடசாலைகள்

**AB வகை :-**

இவை க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம் உட்பட சகல கற்கை நெறிகளையும் கொண்டிருக்கும். நாட்டிலுள்ள மத்திய மகாவித்தியாலங்கள், தேசியப் பாடசாலைகள், கல்லூரிகள், கொத்தணிப் பாடசாலைகள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.
1 தொடக்கம் 13 வரை அல்லது 6 தொடக்கம் 13 வரையான வகுப்புகளைக் கொண்டிருக்கும்.

**1C வகை :-**

உயர்தர வகுப்பில் கலை/வர்த்தகம் மட்டும் உள்ள பாடசாலைகள். இங்கே விஞ்ஞானபிரிவு இருக்காது. மகாவித்தியாலயங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. இங்கே 1 - 13 வரை அல்லது 6 - 13 வரை வகுப்பு நடைபெறும்.

**2 ஆம் வகை :-**

தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெறும் பாடசலைகள் இவ்வகையைச் சார்ந்தவை. இவை வித்தியாலயங்களாக இருக்கும்.


**3 ஆம் வகை :-**

தரம் 1 தொடக்கம் 5 வரையான அல்லது 1 தொடக்கம் 8 வரையான வகுப்புகளைக் கொண்டிருக்கும். இவை அ.த.க. பாடசாலையாக இருககும்.



அறிஞர்அண்ணா 1909இல் பிறந்தார்.

# எல் நினோ



சமுத்திர நீர் காலத்திற்கு காலம் வெப்பமடைந்து கொண்டிருக்கிறது. இதனால் காலநிலை திடீரென வழமைக்கு மாறான நிலைக்கு மாறும் வாய்ப்பிருக்கிறது. இந்த இயற்கை அனர்த்த நிலைக்கு ஒரு பொதுப்பெயர் இருக்கிறது அதுதான் எல் நினோ (El Nino). இது 2 - 7 வருடத்திற்கு ஒருதடவை பருவமாற்றங்களுக்கு ஏற்ப ஏற்படுவதுண்டு.

இதன் பாதிப்பு மத்திய தரைக்கோட்டில் அமைந்துள்ள நாடுகளைத்தான் பெரிதும் தாக்கும். இப்படி 1997இல் எல் நினோ ஒருதடவை உச்சகட்டத்தை அடைந்தது. இதன்போதுதான் தென்கிழக்கில் கடும்வரட்சி ஏற்பட்டது. இதன்காரணமாக இந்தோனேசியாவில் பெருங்காட்டுத் தீ பரவி 1.5 மில்லியன் ஹெக்டேர் காடுகள் எரிந்து சாம்பலாகிப்போனது. இதுபோன்ற பலசம்பவங்கள் தென்கிழக்காசிய நாடுகளில் நடந்துள்ளன.

# லாநினோ

மேற்சொன்ன எல்நினோ தாக்கத்தின் தொடர்ச்சியாக வருவதுதான் லாநினோ (La-nino) தாக்கம் இது எல்நினோவின் தொடர்ச்சியாக இருந்தாலும் முற்றிலும் வித்தியாசமானதும், எதிரானதுமாகும். அப்படியானால் லாநினோ என்பது கடும்மழை வெள்ளப்பெருக்கு, பனிப்புயல், பனிமழை போன்றவற்றால் தாக்கப்படுவதாகும். மேற்சொன்ன எல்நினோவின் காரணமாக ஏற்பட்ட வெப்பத்தை ஈடுசெய்யவோ அல்லது அதன் தொடர்ச்சியாகவோ லாநினோ நடைபெறுவதுண்டு. சில நாடுகளில் எல்நினோவை விட இந்த லாநினோ தாக்கத்திற்குத்தான் மக்கள் அதிகம் அஞ்சுகிறார்கள். உதாரணமாக பிலிப்பைன்சில் அவ்வப்போது நடைபெறும் ஸ வெள்ளப்பெறுக்கு, மண்சரிவு இதன் தொடர்ச்சியாகும்.






அன்னை தெரேசா 1910இல் யூகோஸ்லாவியாவில் பிறந்தார்.






முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி (அண்மையில் இறந்த) ரொனால்ட் ரீகன் 1911இல் பிறந்தார்.






பிரபல ஓவியர் M.F.ஹுசேன் 1915இல் பிறந்தார்.

ECBC
VAVUNIYA

# மாபெரும் கணினி புலமைப் பரிசில்

வெல்லுங்கள்

## INFOTECH 2005

**75%**

**ECBC** வடபகுதி மாணவர்களுக்கு திறமையும் தகுதியும் வாய்ந்த முன்னணி கணினி நிறுவனங்களுடன் இணைந்து பல கிளைகளினூடாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்க முன்வந்துள்ளது.

01) யாழ்ப்பாணத்தில் பாயும் ஆறு யாது?
02) விண்வெளி யுகத்தை ஆரம்பித்த நாடு எது? எப்போது?
03) உலகில் மிகப் பெரிய கடல் எது?
04) இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
05) கொலம்பியா விண்கலம் முதன் முதலில் எப்போது விண்ணில் செலுத்தப்பட்டது?
06) சந்திரனுக்கு முதன் முதலில் அனுப்பப்பட்ட நாயின் பெயர் யாது?
07) ஐக்கிய நாடுகள் சபையில் இறுதியாக சேர்த்துகொள்ளப்பட்ட நாடு?
08) உலகின் மிகப்பெரிய நூலகம் எது?
09) நேபாளத்தின் தேசிய விலங்கு யாது?
10) இலங்கையின் தற்போதைய (2005) கல்வி அமைச்சர் யார்?
11) தொல்காப்பியம் எத்தனை பாடல்களைக் கொண்டது?
12) இலங்கையின் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரர் யார்?
13) அதிகமுறை இந்திய தேசிய விருதுபெற்ற தமிழ் நடிகர் யார்?
14) 2005 பிரஞ்ச் ஓப்பன் டென்னிஸின் பட்டம் பெற்ற ஆண்/பெண் வீரர்கள் யார்? எந்நாட்டவர்?
15) சமஷ்டி முறைமையின் தந்தை யார்?

வினாத்தாளை பூர்த்திசெய்து, அத்துடன் உங்கள் முழுப்பெயர், தபால் முகவரி, தொலைபேசி இலக்கம், கையொப்பம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கையெழுத்துப் பிரதியொன்றை தயார்செய்து அருகிலுள்ள **ECBC** அலுவலகத்துக்கு 20-07-2005க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

### ECBC கிளை அலுவலக முகவரிகள்

- **ECBC :** 30, Station Road, P.O. Box. No. 14, **Vavuniya.** 0777 585920
- **New Univac :** 87, Pandarikulam, Nearest Ammankovil, **Vavuniya.** 0714181909
- **aat-tamil.com :** Supramaniam Road, **Chunnakam.** 021 4591448
- **Royal Micome Academy :** Navalarmadam, Karanavai Centre, **Nelliyadi.** 021 2263670
- **It@Technoma :** 15, Station Road, **Kokkuvil.** 021 - 591989
- **Computer World :** 7th Mile Post, **Chankanai.** 021 4591761
- **ECBC :** 31, Hosital Road, **Mannar.** 077 3288854



M.G.ராமச்சந்திரன் (M.G.R) 1917இல் பிறந்தார்.



## ஆக்கங்களை அனுப்பும்போது....

- **தா**ளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதுங்கள்.
- **தெ**ளிவான கையெழுத்தில் உங்கள் ஆக்கங்கள் அமையட்டும்.
- **ஓ**வியங்கள் அனுப்புவதாயின் கறுப்புநிறப் பேனாவால் அல்லது பென்சிலால் வரைந்து அனுப்புங்கள் வர்ண ஓவியங்கள் இப்போதைக்கு வேண்டாமே பிளீஸ்!
- **உ**ங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தெளிவாக கடித உறையிலும் ஆக்கம் எழுதும் தாளிலும் எழுத வேண்டும்.
- **பொ**து அறிவுத் தகவல்கள், மருத்துவக் குறிப்புகள் போன்றவற்றை அனுப்பும்போது அவற்றை எங்கிருந்து பிரதி செய்தீர்கள் என்பதை தவறாமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

வாசகர்களே! மேலுள்ள நிபந்தனைகளைப் பார்த்து பயந்துவிடாதீர்கள். உங்கள் ஆக்கங்களை நாம் உரிய முறையில் பிரசுரிக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்த நிபந்தனைகள்.

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**பூங்கனி**

இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.

## குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ தானடா*



## ஊ ஊமைத்துரை

"எம்மோடு வயலுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா? அங்கு கொஞ்சிவிளையாடும் எங்கள் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்தாயா? மாமனா, மச்சானா மானங்கெட்டவனே....." இந்த வசனத்தைக் கேட்டதும் உங்களது ஞாபகத்திற்கு வருபவர் யார்? நிச்சயமாக வீரபாண்டிய கட்டபொம்மன் தானே!

அந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அருமைத்தம்பிதான் இந்த ஊமைத்துரை. அண்ணனைப் போலவே இவரும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடியவர்.

1799-09-05இல் பானர்மென் என்ற தளபதியின் படையெடுப்பை எதிர்கொண்டு, வெற்றிவாகை சூடினார். வீரபாண்டியகட்டப்பொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர் ஊமைத்துரையை சிறையிலடைத்தார்கள். எனினும் அவர் அங்கிருந்து தப்பிப் போய் மீண்டும் படைதிரட்டி அங்கிலேயருக்கு எதிராகப் போராடினார்.

1801-11-16இல் மரணமான இவர், இறக்கும் வரையிலும் வாய் பேச முடியாதவராக இருந்துள்ளார். எனினும் தனது படையினர்க்கு சைகைமூலமாக கட்டளைகளைப் பிறப்பித்து பல வெற்றித்தாக்குதல்களை நடத்தியிருக்கிறார். ●



27 வருடம் சிறையில் இருந்த தென்னாப்பிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா 1918இல் பிறந்தார்

# www.ஆச்சரியம்.com !





முதலாம்படியும்
காலை வைத்தேன்
பெத்தவளே தாயே!......
ஐந்தாம்படியிலும்
காலை வைப்பேன்
பெத்தவளே தாயே - ஆனா
ஆறாம்படியை காணவில்லை
பெத்தவளே தாயே



பூனைக்கு
விளையாட்டு
மௌசுக்கு
ரேர்லர் தேயுது....



ஐந்தில்
திருந்தாதது
ஐம்பதிலும்
திருந்தாது

**இணையதளத்தில் சுட்ட ஒரு குட்டிக் கதை**

## பூனையும் எலியும்

ஒரு நாள் பூனையும் சுண்டெலியும் எதிர்பாராத விதமாக ஒன்றை ஒன்று சந்தித்துக் கொண்டன. பூனையைக் கண்டு பயந்த சுண்டெலி அதனைக் காட்டிக் கொள்ளாமல்

''பூனை அண்ணா உங்களுக்கொரு சேதி தெரியுமா? நாம் அனைவரும் வேறு இடத்திற்குப் போக இருக்கிறோம். அதனால் இனிமேல் உங்களுக்கு சாப்பிட எதுவுமே கிடைக்காது. இனிமேல் சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்?" என்று கிண்டலாகக் கேட்டது.

"இப்படி எதிர்பாராத விதமாக எலிகள் அகப்பட்டால் உடனே பிடித்துச் சாப்பிடுவேன்'' என்றுசொன்னது.



இந்திய விண்வெளித் துறைக்கு வித்திட்ட விக்ரம் சாராபாய் 1919இல் பிறந்தார்.

# மனிதர்கள் பலவிதம்

அருகிலிருப்பவர் கென்யா நாட்டின் பழங்குடி இனத்தவரான சம்ரு (Samburu) இனத்தைச் சேர்ந்தவர். கென்யாவில் பாலைவனத்தை அண்டிய பிரதேசங்களில் இவர்கள் வசிக்கிறார்கள்





இப்பெண்மணி ஆப்பிரிக்காவில் வாழும் பழங்குடியின மக்களாகிய மாசை (Masai) இனத்தைச் சேர்ந்தவர். இம்மக்களின் பிரதான தொழில் கால்நடை வளர்ப்பும், காட்டுமிருகங்களை வேட்டையாடுதலும் ஆகும்.

இச்சிறுமி இந்தோனேசியாவைச் சேர்ந்தவர். இந்தோனேசியாவின் பாரம்பரிய நடனம் பாலி (Bali) ஆகும். இந்நடனத்திற்கான பாரம்பரிய உடைகளோடு இச்சிறுமி காணப்படுகிறார்.





அவுஸ்திரேலியா நாட்டின் சுதேசக் குடிகள் அபோரிஜின்ஸ் (Aborigines) ஆவர். 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் அவுஸ்திரேலியாவிற்கு வந்தபோது இவ் ஆதிவாசிகள் 3லட்சம் பேர்வரையில் இருந்தார்களாம்.




அன்மையில் இறந்த இரண்டாம் ஜான்போல் 1920இல் பிறந்தார்.

# கணினி  ணா கணினி

குரும்பையூர் கணினியன்


கணினிகளின் தோற்றப் பின்னணி மிகவும் சுவையானது. எடுத்த எடுப்பிலேயே இப்ப நீங்கள் பார்க்கின்ற கணினிகள் வந்து விடவில்லை. முறையான, முதல் டிஜிற்றல் கணினி 1945ம் ஆண்டளவில்தான் தோற்றம் பெற்றது. ஆனாலும் மனிதனுடைய மண்டைக்குள் இருக்கின்ற கணினி தன் கணிப்பை தொடங்கியது இன்று, நேற்றல்ல ஏறத்தாழ. 5000 ஆண்டுகளுக்கு முன்பே அந்தச் சிந்தனை சிறகடிக்கத் தொடங்கியது.



ஆம் மனிதன் மர இலைகளால் தன்னை மறைத்துக் கொண்ட காலங்களிலேயே மனதுக்குள் கணக்குப் போட ஆரம்பித்து விட்டான். அன்று தொடங்கியவன் இன்றைக்கு கணினியில் வந்து நிற்கின்றான்.

மனிதன் விரல்களை வைத்து எண்ண ஆரம்பித்து, (குட்டிகளே விரல் சூப்பாதீர்கள் அது எவ்வளவு பயனுள்ளது பார்த்தீர்களா?) பின்னர் கற்கள், காய்களைக் கொண்டு எண்ணி, தனது கணிப்பு முயற்சியில் முன்னேறினான். இதன் விளைவாக அவன் முதன் முதலில் எளிமையான ஒரு கருவியை கண்டுபிடித்தான். அதன் பெயர்தான் மணிச்சட்டம் (Abacus) அட அதுதான் நீங்கள் பயன்படுத்திய எண் சட்டம்.

நாங்களெல்லாம் முன்னர் பள்ளிகளில் பயன்படுத்தினோம். நீங்கள் மிலேனியம் பிள்ளைகளாச்சே எங்கே பார்த்திருக்கப் போகிறீர்கள்? 'போா' அடிக்குதா? இல்லை தானே






வங்காளதேசத்தின் சினிமா இயக்குநர் சத்தியஜித்ரே 1921இல் பிறந்தார்.

போய் கொஞ்சம் யூஸ் குடிச்சிட்டு வாங்க...... காத்திருக்கிறேன். ஆனால் கட்டாயம் வரவேணும் குட்டிகளே!

ஆம் மணிச்சட்டத்தில் அப்படி யொன்றும் நுட்பமான விடயங்கள் இல்லை. மரச்சட்டத்தில் இணை கோடுகளாக இருக்கும் கம்பி களில் மணிகள் கோர்க்கப் பட்டிருக்கும். இன்றுங் கூட சீனா மற்றும் யப்பான் நாடுகளில் பயன்படுத்தப்பட்ட பெரும் கருவி.

ரஷ்யர்களால் பயன்படுத்தப்பட்ட மாதிரி ‘அபாகஸ்’ (Abacus) இதுவாகும். (படத்தைப் பார்க்க)

இதை வைத்துக்கொண்டு எண்களை குறித்து வைப்பதோ அல்லது கூட்டுவதோ, கிழிப்பதோ அனைத்தும் முடியும். வலது பக்க கம்பியில் இருந்து ஒவ்வொரு கம்பிக்கும் ஒன்று, பத்து என்று ஒரு பெறுமதி காணப்படும். ஆனாலும் கணித்தலையும், மனிதனையும் இந்த மணிச்சட்டம் திருப்திப் படுத்தவில்லை. பெரு க்கல், வகுத்தல் போன்றவற்றை இதனால் செய்ய முடியாமல் போனது. விடுவானா மனிதன்?

நேப்பியர் (Nopier) என்பவர் பெருக்கலைச் செய்வதற்கு ஒரு எண் கட்டத்தை கண்டுபிடித்தார். அதன்பின்பு 1633இல் வில்லியம் ஆட்ரெடு

## குறும்புக் குமரன்

வழங்கும்

அ முதல் ஃ தானடா



## எ எஃலோரா

எல்லோரா என்ற சொல்லைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்தானே! இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அவுரங்காபதி என்னும் இடத்திற்கு வடமேற்கே 22கி.மீ .தூரத்தில் இருக்கிறது எல்லோரா.

மலைகளைக் குடைந்து கோவில்களை (குடைவரை கோவில்கள்) அமைத்திருக்கிறார்கள். இங்கே 34 கோவில்கள் உள்ளனவாம்.

இவற்றிலே இந்துக் கோவில்கள் 17, பௌத்த கோவில்கள் 12, சமணக் கோவில்கள் 5ம் உள்ளன.


எல்லோராவின் மற்றுமொரு சிறப்பு அதன் ஓவியங்கள். அனைத்து கோவில்களிலும் அழகிய ஓவியங்களை வரைந்துள்ளனர். அதிலும் திருமால் - சீதேவி இருவரும் கருடனில் பறக்கும் காட்சி மிக அழகான ஓவியமாக இன்றும் பார்ப்பவர்களை வியக்க வைக்கிறதாம்.

எனக்கும் ஒருக்கா போய்வர ஆசைதான், என்ன செய்யிறது.... நேரமில்லை. ●



முன்னாள் ஆந்திர முதல்வர் N.D. ராமராவ் 1923 பிறந்தார்.

என்ற கணித மேதை இந்த ரேப்பியர் எண் கட்டத்தை அடிப்படையாக வைத்து ‘சிலைடு ரூல் (Slide Rule) என்கின்ற கருவியை கண்டுபிடித்தார். இதன் மூலம் பெருக்கல், வகுத்தல் எல்லாம் செய்ய முடிந்தது. உங்களுக்கு தெரியும் தானே பெருக் கலுக்கு என்ன குறியீடு குட் டீஸ் ஆமா ‘x’ இது தானே. உங்களுக்கு தெரியாதது என்ன தெரியுமா? இதை கண்டுபிடித்தவர் கூட இந்த வில்லியம் ஆட்ரெடு என்ற மேதைதான்.



இன்னொரு சமாச்சாரம் தெரியுமா? இப்படியே கணிப்பு சார்ந்த கண்டுபிடிப்புகள் வளர்ந்து கொண்டு போகையில் 1642இல் பிரான்ஸ் நாட்டில் வரி விதிப்பு அதிகாரி வீட்டில் ஒரே இம்சை பாருங்கள். பின்னை என்னங்க வரிவிதிப்பு வேலையிலை வருகிற கூட்டல் கழித்தல் வேலைகள் எல்லாம் வட்டுக்கு கொண்டுவந்து விளையாடிக் கொண்டிருக்கிற உங்களை போன்ற அந்த சின்னப் பிள்ளையை அழைத்து “இந்தா - இந்தக் கணக்கை கொஞ்சம் போட்டுக்கொடு” என்றால் நம்ம வாண்டுகளுக்கு கோபம் வராதா என்ன? இது இப்படியே தொடர்ந்து தொடர்ந்து பத்தொன்பது வயது வரை அந்தப் பிள்ளைக்கு பெரிய இம்சை தான். பையனுக்கு இந்த வேலைபழு போராய்ப் போனது......

அவன் என்ன செய்தான் தெரியுமா? அட அவன் யாரென்று இன்னும் சொல்லவில்லையா ஹி...ஹி..ஹி அடுத்த clickஇல் சொல்கின்றேன்.

- மிகுதி அடுத்த Clickஇல்

**சிந்தனைக்கு**

பணம் நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக நினைப்பது பைத்தியக் காரத்தனம் அது நம் தேவைகளைப் பெருக்கவே செய்கிறது.



கியூபாவின் ஜனாதிபதி பிடல்கேஸ்ரோ 1926இல் பிறந்தார்.

# யாவும் ஜோக்கே....

# யாவரும் சிரிப்பீர்....



''என்னங்க உங்க பையன்
கிணற்றுக்குள்ள போய்ப் படிக்கிறான்''
''நான் தான் பாடத்தை ஆழமாய்
படிக்கச் சொன்னேன் அதுதான்
படிக்கிறான்.

-சு.கௌரீஷன்

''பாட்டி, நாங்கள உங்களைப் பற்றி
பேசவும், நீங்க வரவும் சரியா இருக்குது
உங்களுக்கு ஆயுசு நூறு பாட்டி.''
''டேய், எனக்கு நூற்றி ஐந்து வயசாகுது.
நான் உயிரோட இருக்கிறது உங்களுக்கு
பிடிக்கலையா?''

-சு.கௌரீஷன்





''சார் உங்களாலதான் எனக்கு இந்த
விபத்து ஏற்பட்டது?''
''எப்படி''
''நீங்கதானே படித்தபடி நட என்று
கூறினீர்கள். நான் படித்தபடி தெருவில்
நடந்துபோனேன் கார் மோதிவிட்டது.

-சு.கௌரீஷன்

''ஏண்டா நகர்ந்து நகர்ந்து உட்கார்ந்து
எழுதுகிறாய்?''
''நீங்கதான் வார்த்தைக்கு வார்த்தை
இடம்விட்டு எழுதச் சொன்னீங்க.''

-ப.வைஷ்ணவன்






இங்கிலாந்தின் முதல் பெண்பிரதமர் மார்கிரட்த் தட்சர் 1925இல் பிறந்தார்.

# மாதம் ஒரு பாடசாலை

## மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி




ஒரு வெள்ளிக்கிழமை காலைவேளை... மாதம் ஒரு பாடசாலைப் பகுதிக்குத் தகவல்கள் திரட்ட, மன்னார் நகரின் மத்தியில் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரிக்கு விஜயம் செய்தோம்.

வட்டவடிவ... மைதானம், அதனைச் சுற்றிலும் கட்டிடங்கள்... குளிர்ச்சியை வாரித் தெளிக்கும் அழகிய வேப்ப மரங்கள்... ஒவ்வொரு வகுப்பறையின் முன்பும் அழகிய பூங்கன்றுகள்... அதனைச் சுற்றி கருக்கு மட்டையில் வேலி... அந்த வேலிக்கு வர்ணம் வேறு பூசியிருந்தார்கள். பார்ப்பதற்கே எவ்வளவு அழகாக இருக்கிறது? என வியந்தவாறே, அதிபரின் அலுவலகத் திற் குள் நுழைந்தோம்.

புன்னகை பூத்த முகத்தோடு எமை வரவேற்ற அதிபர் அருட் சகோதரர். ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள், பாடசாலையின் வளர்ச்சி பற்றி எம்மோடு மனம்திறந்து பேசினார்.

"பாடசாலையின் வரலாறு வேணும் சேர்! நாம் கேட்க, திரு.செ.கருணாகரன் அவர்களை அழைத்த அதிபர் அவர்கள், எமக்குத் தகவல்களை வழங்குமாறு கூற, ஆசிரியரும் நாம் கேட்டவற்றை தந்தார்.

வணபிதா புத்தேன் அவர்களின் அயராத முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஆரம்பத்தில் ''நல்லாயன் பாடசாலை'' என்றே அழைக்கப்பட்டது. பின் 1904ம் ஆண்டு சூசையப்பர் சகோதரர்களால் இப்பாடசாலை நிறுவப்பட்டு 'மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை எனப் பெயரும் சூட்டப்பட்டது.





கவிஞர் கண்ணதாசன் 1927இல் பிறந்தார்.

ஆரம்பத்தில் ஆண்கள் பாடசாலையாக இருந்து, பின் 1925 - 1950 வரை கலவன் பாடசாலையாக இயங்கி, பின் மீண்டும் ஆண்கள் பாடசாலையாக மாறியிருக்கிறது இப்பாடசாலை!.

கல்வி,ஒழுக்கம், விளையாட்டு என அனைத்திலும் என்றும் மங்காத புகழுடன் திகழும் இப்பாடசாலையில் ஒரு வித்தியாசமான நடைமுறை இருக்கிறது. என்ன தெரியுமா?

திங்கள் முதல் வியாழன் வரை தினமும் காலையில் 30 நிமிட நேரம் தியானம் இடம்பெறுகிறதாம். "சமய வேறுபாடுகள் எதுவுமின்றி நடைபெறும். இத்தியானத்தின் மூலம் மாணவர்களின் நல்லொழுக்கம் பேணப்படுகிறது" என்கிறார் ஆசிரியர் திரு. செ.கருணாகரன் அவர்கள்.

அத்துடன் தினமும் இங்கு உண்டியல் மூலம் பணம் சேகரிக்கப்பட்டு மிகவும் வறிய மாணவர்களுக்கு பாதணி, காலுறை, காலையுணவு, வசதிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் போன்றவற்றுக்காக வழங்கப்படுகிறதாம்.

மேலும் வினைத்திறன் மிக்க மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் டிலாசால் அருட் சகோதரர்களால் வருடா வருடம் இரண்டு ஆசிரியர்கள், வெளிநாட்டுக்கு

## குறும்புக் குமரன்
வழங்கும்
அ முதல் ஃ தானடா



## ஏரம்பையர்

யார் இவர் என்கிறீர்களா? யாழ்ப்பாணம் மாதகல்லைச் சேர்ந்த மிகச் சிறந்த தமிழ்ப் புலவர் இவர்.

சுப்பிரமணிய சாத்திரியார் என்பவரின் மகனான இவர், யாழ்ப்பாணம் வேலுப்பிள்ளை, சம்பந்தப் புலவர், சங்கர பண்டிதர் அகியோரிடம் வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றைக் கற்றார்.

யாழ் வண்ணார் பண்ணையில் இயங்கிய சைவப்பரிபாலன சபையில் விரிவுரையாளராக இருந்த இவர் கணித வல்லுநராகவும் திகழ்ந்தார். அத்துடன் ஆறுமுக நாவலரின் நண்பராகவும் விளங்கினார்.

இவர் இயற்றிய நூல்கள் சிரார்த்த விதி, கனாநூல், சூரனுடைய முற்பிறப்புச் சரித்திரம், நாகேசுவரி தோத்திரம், மாதகல் பிள்ளையார் ஊஞ்சல் போன்றனவாகும்.

நீதிசாரத்தை வடமொழியில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்த இவர் சேது புராணத்தையும் தமிழில் தந்திருக்கிறார். ●

அடுத்த இதழில்...
உலகப் புகழ்பெற்ற பெரியார்கள் தங்களைப் பற்றிக் கூறும்
**என்னைத்தெரியுமா?**



கம்யூனிஸ்ட் புரட்சிவாதி சேகுவேரா 1928இல் பிறந்தார்.



அனுப்பப்பட்டு அவர்களுக்கு விஷேட பயிற்சிகளும் வழங்கப் படுகின்றனவாம்.

பாடசாலையில் நாம் நின்றிருந்த வேளையில், ஒரு வகுப்பறையில் பல மாணவர்கள் ஆங்கிலத்தில் சத்தமாகக் கதைக்கும் சத்தம் கேட்க, 'என்ன ஏது என்று விசாரித்தோம். இங்கிலாந்தைச் சேர்ந்த இரண்டு ஆங்கிலேயர்கள், மாண வர்களுக்கு இலவசமாக ஆங் கிலம் கற்பிக்கிறார்கள் என்று தகவல் கிடைத்தது. ஒவ்வொரு தவணை விடுமுறையின்போதும் இவ்வாறான வகுப்புகள் நடைபெறுமாம்.

**"உலகுளோர் பலர் புகழ்...."** என்று ஆரம்பிக்கிறது பாடசாலைகீதம். பாடசாலையின் கட்டிய வாசகம் **"விசுவாசத்தில் உறுதியாய் இரு"** (Fortes in fide) என்பதாகும். தரம் 6, 7 என்பன ஆங்கில மொழியிலும் (English Medium) நடத்தப் படுகின்றன.

அணமையில இப்பாடசாலையின் உதைபந் தாட்ட அணி தென்கொரியா சென்று அங்கு இடம்பெற்ற சுற்றுப் போட்டிகளில் இலங்கை சார்பாக கலந்து கொண்டி ருக்கிறது.

வருடா வருடம் சராசரி யாக இருபது மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி பெறுகிறார்கள். அவர்களில் கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் அதிகமாம்.

சரி பாடசாலையில் ஏதாவது வளப்பற்றாக்குறைகள் இருக்கின்றனவா? என விசாரி த்தோம். 'தேசியப் பாடசாலையாக இருந்தும்' இதுவரை ஒரு கணினிக் கூடம் கட்டித் தரப்படவில்லை. அத்துடன் எமது விளையாட்டு மைதானமும் புனரமைக்கப்பட வேண்டி யிருக்கிறது என்றார்கள்.

இவ்வாறு நாம் சேகரித்த தகவல்களுடன், அதிபர் அவர்களை அணுகி "பூங்கனி மூலமாக நீங்கள் கூற விரும்புவது என்ன?" என்று கேட்டபொழுது....

அதிபர் சொன்னார் "ஒரு பாடசாலையானது, ஒரு மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு உதவவேண்டும். அதாவது உடல், உள, அறிவு சமூக, ஆன்மீக வளர்ச்சி ஒவ்வொரு மாணவனிடத்திலும் வளரவேண்டும். ஒவ்வொரு



அன்மையில் மறைந்த பலஸ்தீனத் தலைவர் யாசீர் அராபத் 1929இல் பிறந்தார்.

மாணவனும் தன்னைத்தான் வாழும் சமூகத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். எவ்வளவுதான் விஞ்ஞான வளர்ச்சியை ஏற்றுக் கொண்டாலும், அனைவரும், மனிதம், ஆன்மீகம் இவை களையும் மதிக்கவேண்டும். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல இவை இரண்டும் இருக்கின்றன."

**அ**திபரின் அற்புதமான கருத்துகளைச் செவிமடுத்தவாறே, அவரது ஆசனத்தின் பின்புறச் சுவரில் மாட்டப்பட்டிருந்த இயற்கைக் காட்சிப் படத்தினை நோக்கினோம். அங்கே ஒரு ஆங்கில வசனம். எம் கவனத்தை ஈர்த்தது.

"All our todays are a beautiful coloured backround for all our tomorrows.

எனும் அந்த அழகிய வாக்கி யத்தைக் குறித்துக் கொண்டு, பல நல்ல விடயங்களை அறிந்து கொண்ட மனநிறைவோடு, அதிப ருக்கும் ஏனைய ஆசிரியர் களுக்கும் நன்றி கூறி விடை பெற்றோம்.

– ஹரீஸ் ●


## அடுத்த இதழில்...

மாதம் ஒரு பாடசாலையாக
கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து
ஒரு பாடசாலை தெரிவாகியுள்ளது.
அது எது?
அடுத்த இதழ்வரை பொறுத்திருங்கள்.

## மாணவர் ஆக்கம்

### பதினாறும் பெற்று....

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று பெரியவர்கள் வாழ்த்துவார்கள். "பதினாறும் பெற்று" என்பதைச் சிலர் "பதினாறு பிள்ளைகள் பெற்று" என்று தவறாக பொருள் கொள்வார். ஆனால் பதினாறு என்பது பேறுகளைக் குறிக்கின்றது.



**அவையாவன :**


1) புகழ்
2) கல்வி
3) ஆற்றல்
4) வெற்றி
5) நன்மக்கள்
6) பொன்
7) நெல்
8) அறிவு
9) பெருமை
10) ஆயுள்
11) நன்நூல்
12) இளமை
13) துணிவு
14) பொருள்
15) நோய் இன்மை
16) நுகர்ச்சி

**ப.வைஷ்ணவன்**
தரம் 05E,
வ/இறம்பைக்குளம் ம.ம.வி



சமய மறுமலர்ச்சிக்காக அரும்பாடுபட்ட மார்ட்டின் லூதர்கிங் 1929இல் பிறந்தார்.

## வர்ணம் தீட்டுங்கள்



இ.துவாரகன்
வ/நெடுங்கேணி ம.வி

## நகைச்சுவைக் கதை
# இரு கழுதைகள்



முன்னொரு காலத்தில் ஒரு பாட்டி இருந்தாள். அவளிடம் இரண்டு கழுதைகள் இருந்தன. தினந்தோறும் காலை நேரத்தில் அவள் கழுதையை மேய்ப்பதற்காக வயலுக்கு ஓட்டிக்கொண்டு போவாள். அப்படி ஒருநாள் காலையில் கழுதைகளை ஓட்டிக்கொண்டு போகும்போது எதிரே இரண்டு மனிதர்கள் வந்தார்கள். கழுதைகளை ஓட்டிக்கொண்டு வரும் அவளைக் கேலி செய்யும் விதத்தில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

“கழுதைகளின் அம்மாவே. உனக்கு எங்கள் காலை வணக்கம்.” அந்த மனிதர்களது கேலியை புரிந்துகொண்ட அப்பாட்டி சிரித்துக்கொண்டே நயமாக பதில் சொன்னாள். என் பிள்ளைகளே! நானும் சொல்கிறேன். உங்களுக்கு காலை வணக்கம்.

ப.வைஷ்ணவன்
தரம் 5E, வ/இ.ம.ம.வி.



சந்திரனில் முதலில் காலடி பதித்த நீல்ஆம்ஸ்ரோங் 1930இல் பிறந்தார்.

**மாணவர் ஆக்கம்**

# தெரிந்துகொள்ளுங்கள்

- நாகதாளி சதுரக்கள்ளி, கற்றாளை, இவை வரள் நிலத் தாவரங்ள் ஆகும்.
- மிக விரைவாக தன்னைத்தானே சுற்றும் கோள் வியாழன் ஆகும்.
- மெதுவாக தன்னைத்தானே சுற்றும் கோள் வெள்ளி.
- மிகச்சிறிய கோள் புதன்.
- மிகப்பெரிய கோள் வியாழன்.
- சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும் போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது.

**ர.தனுஷியா**
தரம் 9D
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

## தவறும் திருத்தமும்



ஜூன் மாத பூங்கனியில் வெளியாகியிருந்த லூயி பாஸ்டருடன் ஒரு நேர்காணல் பகுதியில் தவறுதலாக விஞ்ஞானி அல்பிரட் நோபலின் படம் பிரசுரமாகியிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்.

ஆர்–ர்

**Computer Printing Centre**
**வாணி கணனிப் பதிப்பகம்**
Computer Designing & 4 Colour Printing Works




61-B, 1st Cross Street,
Vavuniya.
T.P : 024 2223658



சோவியத் யூனியனின் தலையெழுத்தை மாற்றிய கோப்பசேவ் 1931இல் பிறந்தார்.

# அருந்ததியின் அறிவுப் போட்டி

இல. 04



மே மாத இதழில் கேட்கப்பட்ட பத்து கேள்விகளுக்குமான சரியான விடைகளோடு ஏராளமான தபாலட்டைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் குலுக்கல் முறையில் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## பரிசுபெறுவோர்

① **சி.சிவகௌரி**
இல. 48,
புதிய அமைப்பு வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

② **ப.கஜிந்தன்**
இல. 115/16
பெரியார்குளம்,
பூந்தோட்டம், வவுனியா.

**இருவருக்கும் எமது வாழ்த்துக்கள்**

ரூ. 1000 பெறுமதியான வவுச்சர்கள் இரண்டு இருவருக்கும் பரிசாக வழங்கப்படுகிறது. அவற்றைக்கொண்டு அருந்ததி சூப்பர் மார்க்கெட்டில் நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

## சரியான விடைகள்

1. இன்டிமாம் உல்ஹக்
2. முதுசூரியன், இளஞ்சூரியன்
3. சிக்கிம் மாநிலம்
4. பயக்கோசியஸ்
5. யோசப் ரட்சிங்கர்
6. பூட்டான்
7. டிரோன் பெர்னாண்டோ
8. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
9. Lan (Loacal Area Network)
10. ஹென்றி டுனாலட்

வெற்றிபெற்றோருக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்கள்.



பின்னணிப்பாடகி ஆசாபோஸ்லே 1933இல் பிறந்தார்.

# கேள்விகள்

1. வெள்ளைப்புறா சின்னம் வெளிப்படுத்துவது என்ன?
2. "சர்வதேச தொழிலாளர் அமையம்" என்பதன் சுருக்கக் குறியீடு ILO. இதன் விரிவாக்கம் யாது?
3. அமெரிக்காவின் உளவறியும் நிறுவனம் "மத்திய உளவறியும் தாபனம்" இதன் சுருக்கக் குறியீட்டைத் தருக?
4. "இன்டர்போல்" என்றால் என்ன?
5. உலகின் மிகப்பெரிய கடல் எது?
6. ஆர்ஜன்டினா நாட்டின் தலைநகரம் எது?
7. நைல் நதியின் நீளம் எவ்வளவு?
8. கொலம்பியா நாட்டின் நாணயம் எது?
9. முதலாம் உலகயுத்தம் முடிவடைந்த ஆண்டு எது?
10. ஜப்பானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனங்கள் எவை?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**அருந்ததியின் அறிவு போட்டி-இல-03**
அருந்ததி சுப்பர் மார்க்கெட்,
361, ஹொரவபொத்தானை வீதி,
வவுனியா.


**ARUNTHATHY SUPER MARKET**

உயர் தரத்தினாலான மளிகைப் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட உணவுவகைகள், அனைத்து வகையான ஐஸ்கிறீம் வகைகள், பான்சிப் பொருட்கள், சொக்கலேட் வகைகள், பரிசுப் பொருட்கள், மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.!

**அருந்ததி சுப்பர்மார்க்கெட்**
இல: 361, ஹொரவப் பொத்தானை வீதி, வவுனியா.




நெல்சன் மண்டேலாவின் மனைவி வின்னி 1936இல் பிறந்தார்.



# விளையாட்டுப்பக்கம்

தயாரிப்பு : ஸ்ரீநி



உலகக்கிண்ண கால்ப்பந்துப்போட்டிகள் 2006இல் ஜேர்மனியில் நடைபெறவுள்ளன. இதுவரை 17 உலகக்கிண்ணக் கால்ப்பந்துப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இப்பகுதியில் இதுவரை உலகக் கிண்ணக் கால்ப்பந்துப் போட்டிகள் பற்றிய சுவையான விடயங்களைத் தொகுத்து தர இருக்கிறோம்.

*1904* **FIFA (Federation For International Foot Ball association)** நிறுவப்பட்டதுடன் உதைபந்துப் போட்டிகள் உத்தியோக பூர்வமாக உதயமாகின. *1924*இல் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் உதைபந்து முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. *1928*இல் அம்ஸ்ரடாமில் உதைபந்தாட்ட நாடுகளுக்கிடையே புதிய போட்டி உருவாக வேண்டுமென கூடி முடிவெடுக்கப்பட்டது. *1929*இல் ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் உருகுவேயில் முதலாவது FIFA உலகக் கிண்ணப் போட்டிகள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

## உருகுவே மொன்றிவீடியோ - 1930

முதலாவது உலகக் கிண்ணக் கால்ப்பந்துப் போட்டியை நடத்தும் பாக்கியம் தென்அமெரிக்காவின் கிழக்கெல்லையில் அட்லாண்டிக் கரையோரத்தில் பிரேசிலுக்கும், அர்ஜெண்டினாவிற்கும் இடையில் ரியோடிலாபிளாட்டா வளைகுடாவில் உள்ள உருகுவே நாட்டுக்குக் கிடைத்தது. ஏன் தெரியுமா உருகுவே தெரிவுசெய்யப்பட்டது?

1) *1928*இல் ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாக உருகுவே வெற்றிபெற்று நடப்புச் சாம்பியனாக விளங்கியது.

2) உருகுவே தனது *100*வது சுதந்திரதினத்தை *1930*ம் ஆண்டு கொண்டாடியது.

3) போட்டியை நடத்துவதற்கான முழுச் செலவையும் உருகுவே ஏற்றுக்கொண்டது.

FIFAவின் இந்த முடிவு ஐரோப்பிய நாடுகளுக்கு கசந்தது. அட்லாண்டிக் சமுத்திரத்திற்குள்ளான நீண்ட பயணம், அலைச்சல், செலவு, பாதுகாப்பு கருதி பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் இபபோட்டியில்



ஈராக்கின் இரும்பு மனிதர் என அழைக்கப்பட்ட சதாம்உசேன் *1937*இல் பிறந்தார்.

கலந்துகொள்ளவில்லை. எனினும் முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் 9 தென்னமெரிக்க நாடுகள், 4 ஐரோப்பிய நாடுகள் என மொத்தம் 13 நாடுகள் பங்குபற்றின.

சில தினங்களின் பின் பிரமாண்டமான சென்ரிநேரியோ மைதானம் (Centenario Stadium) 90ஆயிரம் பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. அர்ஜெண்டினாவிற்கும் உருகுவேக்கும் இடையில் 1930 ஜுலை 30இல் அந்த இறுதிப்போட்டி பரபரப்பாக ஆரம்பமானது. இரண்டும் தென் அமெரிக்காவின் தென்கோடியில் அமைந்துள்ள நாடுகள். அட்லாண்டிக்கின் மேற்கு கரையோர நாடுகள்! இரண்டுமே உதைபந்தாட்டத்தில் ஜாம்பவான்கள்.

போட்டி தொடங்கியது. முதலாவது அரை நேரத்தின் போது 2 - 1 என்ற கோல் கணக்கில் அர்ஜெண்டினாவே முன்னிலை வகித்தது. அவ்வேளை மொன்றிவீடியோ முழுவதும் கண்ணீர் வடித்தது. மைதானத்தில் கண்ணீர் விடாதே பெண்கள் யாருமே இருக்கவில்லை. ஆண்கள் மட்டுமென்ன ஆண்டவனை வேண்டி கண்களை மூடிவிட்டனர். இரண்டாவது அரைநேரம் தொடங்கியது. உருகுவே ஆக்ரோசமாக போராடியது 4 - 2 என்ற கணக்கில் இறுதியில் முதலாவது உலகக் கோப்பையை தனதாக்கிக்கொண்டது. 30 செ.மீ உயரம் 40 கிலோகிராம் எடையுள்ள தங்கத்தாளான கோப்பையை உருகுவே அணியின் தலைவர் ஜோஷி நஷாசி கரங்களில் ஏந்தினார்.

இதுவே உருகுவே நாட்டின் வெற்றிக் கதை.

- தொடரும்

---

## சாதனையை நோக்கி சனத் ஜெயசூர்யா

கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூர்யா ஜுன் மாதம் 30ம் திகதி தனது 36வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இதுவரை நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் இவர் 9924 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். ஆகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெற இருக்கும் இந்தியா, மேற்கிந்திய தீவுகள், இலங்கை அணிகளுக்கிடையேயான முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் இவர் 10000 ஓட்டங்களைப் பூர்ததிசெய்வார் என அனைவரும் எதிர்பார்கின்றனர். அப்போட்டிகளில் ஜெயசூர்யா 10000 ஓட்டங்களைப் பூர்த்திசெய்து சாதனை வீரராக திகழ பூங்கனி வாசகர்கள் சார்பாக

### ஜெயசூர்யா பற்றி....



| | |
|---|---|
| பிறந்த திகதி | : 30-06-1969 |
| பிறந்த இடம் | : மாத்தறை |
| துடுப்பாட்டம் | : இடதுகை துடுப்பாட்ட வீரர் |
| பந்துவீச்சு | : இடதுகை பந்துவீச்சாளர் (மிதவேகம்) |
| ரெஸ்ட் ஆரம்பம் | : நியூசிலாந்து ஹமில்டன் - 1991 |
| முனுஜ ஆரம்பம் | : அவுஸ்திரேலியா - 1989 |
| அணிகள் | : இலங்கையணி, ACC, ASIAN XV, Colombo Cricket Club, Somerest பிராந்திய அணி |

தொகுப்பு : **அளவை கலைக்கரன்**
பேராதனை, கண்டி.



ஹோங்கோங் நாட்டின் கராத்தே வீரன் புரூஸ்லி 1940இல் பிறந்தார்.

# வன்னியின் கதை 4

## வன்னி மக்களின் சமய நிலை

**முல்லைமணி எழுதுகிறார்....**



மாவீரன் பண்டாரவன்னியன்

**வ**ன்னிப் பெருநிலப் பரப்பில் வாழ்ந்த மக்கள் அனைவருமே சைவ சமயத்தை அனுஷ்டித்தனர். எனினும் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தமது றோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். 1634ஆம் ஆண்டு பனங்காமம் என்ற வன்னிப்பற்றில் ஒரு கிறிஸ்தவ கோவில் ஒன்று கட்டப்பட்டது. இரண்டு வன்னியர்களும் அதிகாரியும் மதம் மாற்றப பட்டதாகக் குறிப்பு உண்டு. வன்னித் தலைவர்களின் பெயர்களுக்கு முன்னால் தொன் பிலிப் தொன் தியோகோ, தொன் கஸபர், தொன் அந்தனி, தொன் பிரான்சிஸ்கோ என்னும் கத்தோலிக்க சமயப் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

வன்னித் தலைவர்கள் உண்மையாகத் தாம் மேற்கொண்ட கிறிஸ்தவ மதத்தில் பற்றற்றவர்களாக இருந்தார்கள் என யாழ்ப்பாணக் கொமாண்டராக இருந்த ஷெவார் தெக்குறூன் அறிக்கையிட்டுள்ளார்.

1960ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்காக ஒரு கிறிஸ்தவ பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பனங்காமத்தின் ஆட்சித் தலைவனாக இருந்த நல்லமாப்பாணர் அவர்கள் தன்னுடைய மகனை அக்கலாசாலையில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்திருந்தார். அவரின்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டன் 1946இல் பிறந்தார்.

மகன் அப்பாடசாலையில் சேர்க்கப்பட்டான். அங்கு மதபோதனையும் அவனுக்கு அளிக்கப்பட்டது. அந்த மாணவன் தனது விடுமுறை நாட்களில் ஒல்லாந்த அதிகாரிகளுடன் நாகப்பட்டினம் சென்றான். அவன் அங்கு இருந்த போது தன்னைப் பிறர் அறியாதவாறு மாறுவேடம் பூண்டு அவ்வூரில் உள்ள இந்துக் கோவில் ஒன்றுக்கு வழிபாடு செய்வதற்காகச் சென்றான். வழிபாடு செய்யும்போது அவனை ஒல்லாந்த அதிகாரிகள் கையும் களவுமாகப் பிடித்துவிட்டனர்.



பன்னிரெண்டு வயதுடைய இந்தச் சிறுவனின் விடயத்தைப் பற்றிக் கூறும்போது கொமாண்டர்

## குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ தானடா*



## ஐ




18ம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட மிகச் சிறந்த வீரர் ஐதர் அலி. ஆரம்பத்தில் திண்டுக்கல்லில் படைத்தளபதியாக இருந்த இவர் தனது திறமையால் "வெற்றிச் சிங்கம் ஐதர்" எனும் விருதினைப் பெற்றார்.

1761இல் அரசராகப் பதவியேற்ற இவர் தனது எதிரிகளான ஆங்கிலேயர், ஐதராபாத் நிசாம், மராத்தியர் ஆகியோரைக் கண்டு அஞ்சாமல் சண்டையிட்டார்.

இவரைத் தோற்கடிப்பது கஷ்டம் என எண்ணிய ஆங்கிலேயர் என்ன செய்தார்கள் தெரியுமா? ஐதராபாத் நிசாம், மராத்தியர் ஆகியோரோடு ஒப்பந்தம் செய்து ஐதர் அலிக்கு எதிராக போர் தொடுக்க அப்போரை எதிர்த்து வெற்றி பெற்றார் ஐதர்.

இவரைப் போர்மூலம் வெல்ல முடியாத ஆங்கிலேயர் சதிசெய்து இவரைக் கொல்லத் திட்டமிட்டனர். அதன்படி 1781இல் பரங்கிப் பேட்டையில் இவரைத் தோற்கடித்தனர். நீண்ட காலம் புற்றுநோயால் அவதியுற்ற ஐதர் அலி 1782இல் உயிர்துறந்தார். ●



புகழ்பெற்ற ஹொலிவுட் நடிகரும், கலிபோர்னியா ஆளுனருமான ஆர்னோல்ட் 1947இல் பிறந்தார்.

ஹெவார் தெக்ருன் அவன் தன் தந்தையின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தான் என்கிறார் தொன்பிலிப் என்னும் கிறிஸ்தவ பெயரைத்தாங்கிய நல்லமாப் பாணரும் ஒரு போலிக் கிறிஸ் தவர் என்பது மறை முகமாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பரராசசேகரன் ஒருமடத்தினை உருவாக்கியிருந்தான். இம் மடத்திற்கு யாழ்பாண மன்னர்கள் நிவந்தங்களை அளித்து வந்தனர். போர்த்துக் கேயர் யாழ்ப்பா ணத்தைக் கைப்பற்றியதும், யாழ்ப்பாண மன்னர் பரம்பரை இல்லாமல் போய்விட்டது. எனினும் வன்னித் தலைவர்கள்



பணங்காமத்தில் பிரசித்தி பெற்ற அதிகாரமும் வலிமையும் கொண்ட கயிலை வன்னியன் மட்டும் என்றும் மதம் மாறியதில்லை.

இந்தியாவில் சிதம் பரத்தில் யாழ்ப்பாண மன்னன் ஒன்றுகூடி சிதம்பரமடத்துக்கு உதவி வந்துள்ளனர். இதுபற்றி "சிதம்பரம் கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டயம்" என்றும் செப்பேடு சில தகவல்களைத் தருகின்றது. இந்தச் செப்பேட்டில் சிதம்பரம் பரராசசேகர மகா



இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் கவாஸ்கர் 1949இல் பிறந்தார்.

ராசாவின் கட்டளை நடத்தும் சூரிய மூர்த்தித் தம்பிரானிடம் நிச்சய சேனாதிராய முதலியார், குலசேகர முதலியார் புவிநல்ல மாப்பாண வன்னியனார், புண்ணியப்பிள்ளை வன்னியனார், ரணசூர ரண தீரராக வன்னியனார் முதலான பல வன்னித் தலைவர்கள் ஒன்றுகூடி உதவி செய்ததாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. கைலைப்பிள்ளை வன்னியனார் பெயராலேயே நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவப் பெயர்களைத் தாங்கிய வன்னியனார்கள் சைவக் கோயில் மடமொன்றுக்கு நிவந்தங்கள் வழங்கியது குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்த ஆட்சியாளர்களை ஏமாற்று வதற்காக கிறிஸ்தவர்போல் நடித்த போதும் உண்மையில் அவர்கள் சைவ சமயத்தவர்களாகவே வாழ்ந்தனர்.

- தொடரும்


அடுத்த இதழில்...

குறும்புக் குமரன் வழங்கும்



ஐடியா இலவசம்


## குறும்புக் குமரன் வழங்கும்

### அ முதல் ஃ தானடா



## ஒ ஒமிட்டோ

ஓமிட்டோ என்ற சொல்லை வாசித்து பயந்துவிடாதீர்கள்! ஒரு பழங்குடியின மக்களின் பெயர்தான் இது.

சரி இவர்கள் எங்கே வாழ்கிறார்கள்? எதியோப்பியாவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள மலைப்புகுதிகளில் இவர்கள் வாழ்கிறார்கள்.

இவர்களது வாழ்க்கையை தீர்மானிப்பது என்செற் (Enset) என்ற மரம்தானாம். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? நம்மூரில் இருக்கும் வாழைமரம் போன்ற அமைப்பில்தானாம் இந்த என்செற் மரமும் இருக்கும்.

இம்மரத்திலிருந்து எரிபொருள் எடுக்கிறார்களாம். அத்துடன் கயிறு, தொப்பி, தட்டுகள், கூரைவேயும் பொருட்கள், பாத்திரங்கள், மெத்தைகள் போன்ற பொருட்களையும் செய்கிறார்களாம்.

ஒமிட்டோ மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட்டது இந்த ஒமிற்றோ மரம்.

தவிரவும் ஒமிட்டோ மக்கள் அனைவரும் விவசாயிகள் அல்லர். மீன் நீர்யானை போன்றவற்றைப் பிடித்து வியாபாரமும் செய் கிறார்கள்.

எப்படியோ இவர்களது வாழ்க்கையை மேம்படுத்த எதி யோப்பிய அரசாங்கம் தற்பொழுது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



உலகை இசையால் வசப்படுத்திய மைக்கேல்ஜாக்சன் 1958இல் பிறந்தார்.

# நீங்கள் சொன்னவை

"பூங்கனியில் வெளியாகும் அத்தனை ஆக்கங்களுமே சூப்பர். இதில் எனக்கு மிகவும் பிடித்தது வெற்றியை நோக்கி கட்டுரையாகும். துன்பம் வரும் வேளைகளில் எல்லாம் நம்பிக்கையூட்டி உற்சாகம் தருகிறது. அதனை எழுதம் வீ.வீ க்கு வாழ்த்துக்கள்.

ஸ்ரீமதி. ஆனந்தி தியாகராஜா, சங்கானை யாழ்ப்பாணம்.

"ஜூன்மாத பூங்கனி சூப்பர். குறும்புக் குமரன் பிரமாதம் விளையாட்டுப் பக்கம் டொனிக் மாதிரி உற்சாகம் அளிக்கிறது. பூங்கனியை வர்ணத்தில் வெளியிட மாட்டீர்களா?"

பு.கஜிதன் தரம்-9B வ/விபுலாநந்தாக் கல்லூரி

உலக வரலாறுக்கு நீங்கள் தந்த விளம்பரமே அட்டகாசம். தொடரைப் படிக்க இப்பவே நாங்க ரெடி.

தே.சசிகலா கனகபுரம், கிளிநொச்சி.

கணினி

கண்ணா கணினி மிகவும் பயனுள்ள தொடராகும். சுவராசியமான நடையில் வேறு எழுதுகிறீர்கள். பாராட்டுக்கள். கணினி பற்றி எதுவுமே தெரியாத என் போன்றவர்களுக்கு இது மிகவும் பிரயோசனமாக இருக்கிறது.

ஜெ.ஜெயசீலன். புதுக்குடியிருப்பு

உங்கள் பூங்கனி இதழ் மிகவும் நன்றாக இருக்கிறது வாழ்த்துக்கள்.

செ.ஸ்ரெலா தரம் 8B, யோகபுரம் மல்லாவி.

ஜூன் மாதப் பூங்கனி எங்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம் உங்களது படக்கதை ஒரு ஆங்கிலக் காமிக்ஸிற்கு நிகராக உள்ளது.

இ.சாமுவேல் தரம் 9B, வ/விபுலாநந்தாக் கல்லூரி

அன்புடன்

பூங்கனி ஆசிரியருக்கு பூங்கனி மாதஇதழ் சூப்பர் அதில் நான் விரும்பி வாசிப்பது ரகசியப் புதையல் பூங்கனி போன்று உலக அறிவை தரக்கூடிய இதழை இதுவரை பார்க்கவில்லை

லோ.விதுஷா தரம் 8, கனகராயன்குளம் ம.வி

ஜூன்மாதப் பூங்கனியில் அசத்திவிட்டீர்கள் பூங்கனியின் தேடல் மிகவும் வரவேற்கத் தக்கதாக உள்ளது ரகசிய புதையல் மிகவும் விறுவிறுப்பாக உள்ளது. அடுத்த இதழ் எப்போது வருமென ஆவலைத் தூண்டுகிறது.

தே.தேவலக்சன் தரம் 10, கனகராயன்குளம் ம.வி

முகப்பில் - ஜெனன், அட்சயா ஸ்ரீநிவாசன் / புகைப்பட உதவி : ஒஸ்ரியா போட்டோ வவுனியா.



புல்லாங்குழல் மேதை ஹரி பிரசாத் சௌராஸ்யா 1938ல் பிறந்தார்

# மருத்துவப் பக்கம்

## சிராய்ப்புக் காயங்கள்




கடந்த மாதம் உள்முறிவுக் காயங்கள் பற்றிப் பார்த்தோம். சிராய்ப்பு அல்லது கிழிப்புக் காயங்கள் பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

இயந்திரங்கள், வெடி விபத்து அல்லது ஏதாவது பொருள் மீது உராய்ந்தால் அல்லது தரையில் இழுபட நேர்ந்தால இந்த சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதன் போது திசுக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படலாம். ஆனால் இரத்தம் அதிகமாக வெளியேற மாட்டாது. ஏனென்றால் அதிர்ச்சி காரணமாக இரத்த அழுத்தம் குறைந்து போயிருக்கலாம். அல்லது இரத்தக் குழாய்கள் நொறுங்கிப் போய், அல்லது அடைப்பட்டுப் போவதாலும், இரத்தம் வெளியேறுவது குறைவாக இருக்கும்.

ஆனால் இந்தவகை காயங்களில்தான் தொற்றுக் கிருமிகள் தங்கள் வேகத்தையும், வலிமையையும் காட்டுகின்றன. இயன்றவரை வீக்கம், வலி,





காயத்தைச் சுற்றி சிவந்து போதல், சீழ் பிடித்தல போன்றவற்றை தவிர்க்கவும். இவை கிருமி களின் ஆக்கிர மிப்பின் அறிகுறியாகும்.

தொடர்ந்து இந்த தொற்று இரத்த ஓட்டத்தில் கலக் குமானால் கடுமை யான காய்ச்சல் பிடிக்கலாம் ஜாக்கிரதை. இப்படிக் காய்ச்சல் வரும்பொழுது காலம் தாழ்த்தாமல் லேசான சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டால் முதலில் டெட்ரோல் அல்லது சோப்புக் கலந்த சுத்தமான நீரில் சுத்தமாக கழுவவேண்டும். அதன்பிறகு ஊதாமை (Violet ink) அல்லது பாஸிட்ராசின் களிம்பைத் தடவி கட்டுப் போட்டுக் கொள்ளலாம் வசதியாக. (கட்டு எப்படி போடுவது என்பது பற்றி இன்னுமொருமுறை வகுப்பெடுக்கிறேன்.)

காயங்களில் ஏற்படும் கிருமித் தொற்றையும் அவற்றை நீக்குவதற்-கான வழிகளையும் அடுத்த இதழில் பார்ப்போம்.....

**முதலுதவியோன்**
**மீண்டும் உதவுவான்**

தொகுப்பு : ராஜேஸ்



அமெரிக்க டெனிஸ் வீரர் பிட்சாம்பராஸ் 1971ல் பிறந்தார்.

# வெற்றியை நோக்கி



"லட்சியமே பாதை"

வீ.வீ.

வறுமை வெற்றிக்கு தடையல்ல. வாழ்வில் மிக வறியவர்கள் செல்வந்தவர்களாக மாறியும், புகழின் உச்சியில் ஏறியும் உள்ளனர். கடும் உழைப்பு! இதுதான் வெற்றிக்கு வழியென நினை யுங்கள்.



இன்று மனிதன் மிக இலகுவாக முன் னேற முடியும். ஊனம், வறுமை என்பன முன்னேற்றத்தின் ஏணிப் படிகளாக நம்பப்படுகின்றன. நம் பிக்கை, இலட்சியம், இலக்கு என்பன இருந்தால் வெற்றி இலகுவாகிவிடும். நீங்கள் இதற்காக சகிப்புத்தன்மை, தியாகம், விட்டுக் கொடுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு இருக்கும் பிடிவாதம், இலட்சியத்தின் அடிப்படை. அதனை நாம் தடுத்துநிறுத்தக் கூடாது. வழிநடத்த வேண்டும்.

இலட்சியங்களை அடைகாத்தவர்களே வாழ்வில் வெற்றியாளர்கள் ஆகினர்.

வின்சென்ட் சேர்ச்சில் - முன்னாள் பிரித்தானிய பிரதமர்! பிறவியில் திக்குவாயுடையவர். கடற்கரைகளிலும், கண்ணாடியின் முன்னாலும் நின்று நீண்டநேரம் பேசிப்பழகி பின்னாளில் பிரதமராகி தனது பேச்சு வன்மையால் பிரித்தானியாவை இரண்டாம் உலகப்போரில் வெற்றிபெற வைத்தவர்.

இவரது பிடிவாதம் இலட்சியம் பிரமிக்கத் தக்கது. இலட்சியங்களை ஒரு முறை நினைத்தால் மட்டும் போதாது. ஒவ்வொருநாளும் அது பற்றி கற்பனை செய்ய வேண்டும்.

இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் இளைஞர்களை கனவு காணும்படி தூண்டுகிறார். கற்பனைக்கு அவ்வளவு அபார சக்தி உண்டு. நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்களோ அதுவாகவே நீங்கள் மாறிவிடுவீர்கள். நிச்சயம் அவ்வாறு உருவாகுவீர்கள். வாழ்வில் முன்னேற இதனுடன் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

1) இலட்சியத்தை சரியாகத் தேர்ந்தெடுங்கள்
2) அன்றாட வாழ்வில் ஒழுங்கு கட்டுப்பாட்டை பின்பற்றுங்கள்.
3) லட்சியத்திற்காக கடுமையாக உழையுங்கள்.
4) லட்சியத்திற்காக வேண்டியவற்றை தேர்தெடுத்து அவற்றை செயற்படுத்துங்கள்.
5) குறிப்பிட்ட லட்சியத்திற்கு மட்டுமே சக்தியை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.
6) பிறரின் அபிப்பிராயங்களை செவிமடுங்கள். அதற்குப் பயந்து துவண்டு ஒதுங்கிவிடாதீர்கள்.
7) எப்பொழுதுமே துடிப்பாக இருங்கள்.
8) போலி விளம்பரங்கள் கௌரவங்களைக் கைவிடுங்கள். நிஜமாக வாழுங்கள்

**வெற்றி நிச்சயம்**



அமெரிக்க குத்துச்சண்டை வீரர் மைக்டைசன் 1966இல் பிறந்தார்.

## மாணவர் ஆக்கம்

### பொது அறிவுத் தகவல்கள்

1) தங்கத்தை கூடுதலாக உற்பத்தி செய்யும் நாடு ~ தென்னாப்பிரிக்கா
2) உலகின் முதல் சமதர்ம நாடு ~ ரஷயா
3) காகிதத்தைக் கண்டுபிடித்த நாடு ~ சீனா
4) பெண்களுக்கு வாக்குரிமை முதலில் கொடுத்த நாடு ~ நியூசிலாந்து
5) உலகிலேயே அதிக குரங்கினங்கள் வாழும் நாடு ~ பிரேசில்
6) குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் ~ அவுஸ்திரேலியா
7) ஆயிரம் வாவிகளைக் கொண்ட நாடு ~ பின்லாந்து
8) புனித நாடு எனப்படுவது ~ பாலஸ்தீனம்
9) இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படுவது ~ இலங்கை
10) உலகின் மிகச் சிறிய நாடு ~ வத்திக்கான்

**ந.சுமீலன்**
தரம் 10B, வ/விபுலாநந்தாக் கல்லூரி,
வவுனியா,

அடுத்த இதழில்...

**ஆதிகாலத்தில் வாழ்ந்த மிருகங்கள்**

சிறப்புச் சித்திரக் கட்டுரை

## குறும்புக் குமரன்

வழங்கும்

அ முதல் ஃ தானடா



### ஓ ஓலிப் பண்டிகை

ஓலிப் பண்டிகை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என நம்புகின்றேன். இந்து சமய மக்கள் கொண்டாடும் விழாக்களில் இது மிகவும் முக்கியமானது.

"அப்படியா அவர்கள் இவ்விழாவை கொண்டாடியதை நாம் காணவே இல்லையே?" என்கிறீர்களா? சற்றுப் பொறுங்கள். வட இந்தியாவில் தான் இப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

ஏனைய பண்டிகைகள் போலவே உறவினர் வீடுகளுக்குச் சென்று, பலகாரம் சாப்பிட்டு, பட்டாசு கொழுத்தி இவ்விழா கொண்டாடப்பட்டாலும் இதில் ஒரு விஷேசம் இருக்கிறது. என்ன தெரியுமா? ஒருவர்மீது ஒருவர் வர்ணப் பொடிகளைப் பூசி இதனை கொண்டாடுவார்களாம். அன்றைய தினம் அனைத்து மக்களுமே கலர் ஃபுல்லாகத்தானாம் காட்சி தருவார்கள்.

யாராவது முதியவர்கள் இதனைக் கொண்டாடாமல் வீட்டிலே ஒதுங்கியிருந்தால் வீடுதேடிப்போய் அவர்களுக்கும் வர்ணம் பூசுவார்களாம்.

சிவராத்திரி தினத்தை யடுத்து வரும் 15வது நாள் இது கொண்டாடப்படுகிறது. எமது நாட்டிலும் இப்பண்டிகை கொண்டாடப்பட்டால் எப்படியிருக்கும்?



அமெரிக்க டென்னிஸ் வீரர் பிட்சாம்பராஸ் 1971இல் பிறந்தார்.



# தயாவின் வாக்கியப் போட்டி 3

போட்டி இலக்கம் ~ 01இல் பலர் பங்குபற்றி இருந்தீர்கள். அனைவருக்கும். நன்றிகள். பரிசுக்குரியவர்களாக 10பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த வாக்கியம் எழுதியவர் ~

**வே.பிரதீபன்,** வித்தியாபுரம், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.

**"குரங்கில் இருந்து பிறந்தவன்**
**குரங்கைக் கண்டுபிடிக்கவா**
**கொம்பியூட்டருடன்**
**கொண்டாட்டம் வைக்கிறான்?"**

வெற்றிபெற்ற வாக்கியங்களும், வெற்றிபெற்றோர் விபரமும், செப்டம்பர் மாத பூங்கனியில் வெளியாகும்.

**மேலும் பரிசுபெறுவோர்**

01. அ.மன்னார்மணி : பிரதேசசெயலகம், மன்னார்.
02. செ.சுதர்சன் : இல. 4, கச்சேரி விடுதி, வவுனியா.
03. வே.துவாரகன் : இல. 216, உக்குளாங்குளம், வவுனியா.
04. சகீட்பாத்திமா சகானா : தரம் 8F, வ/இ.ம.ம.வி.
05. சூ.நிரூபன் : இல. 2, பொலிஸ்விடுதி, வவுனியா.
06. வி.சர்மிளா : இல. 447/5, ஹொரவப்பொத்தானவீதி, வவுனியா.
07. S.F. ஷபானா : இல. 362/A, மன்னார்வீதி, வவுனியா.
08. வி.தீபன், தரம் 13, மு/புதுக்குடியிருப்பு ம.வி.
09. பா.தனுஷன், இல. 18, கித்துள் வீதி, குடியிருப்பு, வவுனியா.



**பரிசுபெற்ற அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.**

அருகிலுள்ள படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தை எழுதி அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 30-07-2005

அனுப்பவேண்டிய முகவரி

**யாவின் வாக்கியப்போட்டி இல-02,**
**பூங்கனி,**
**ல. 141, திருநாவற்குளம், வவுனியா.**

வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் பெறுவது தொடர்பாக தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்படும்.


**தயா ஸ்ரோர்ஸ்**

**அனைத்து வகையான**

பயிற்சிப் புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் ஆடம்பரப் பொருட்கள், மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

T.P: 024 - 2222386
077 - 3025436

**இல 06, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.**




இளவரசி டயானா 1961இல் பிறந்தார்.




## அலையே

கண்கொட்டி
களித்திருந்த
கேளிர் தம்மை
கண்ணிமைக்கு நேரத்தில்
காவிக்கொண்டு
கண்ணெதிரே
சவமாக்கி
காட்சிப் படுத்திய
கடலலையே - நீ
கனல் கொண்டு
காலனாய் மாறிட
காரணம் யாதோ.....

**எம்.நிதர்சனா**
தரம் - 09, வற்றாப்பளை ம.வி,
முல்லைத்தீவு.

## வாழ்வு சிறக்க...

காக்கையும் கறுப்புத்தான் குயிலும் கறுப்புத்தான்
குயில் கூவினால் பாட்டு என்கிறாய்
காகம் கரைந்தால் மரணம் என்கிறாய்
அந்தக் காகத்தைக்கூட ஒருநாள் பராமரிக்கிறாள்.
இந்தக் குயிலுக்கு என்னதான் கொடுக்கிறாய்.

காக்கை கரைந்தாலும் இசைதான்
குயில்கூவினாலும் இசைதான்
இரண்டையும் இரசிக்க தெரிஞ்சிருக்கணும்.
இரண்டையும் ஒன்றாய் பாத்துக்கணும்.

இரண்டில் உள்ள வேறுமையைக்கூட
ஒற்றுமையாக்கணும்.
நீ இதை செய்தால்தான் வாழ்வு சிறக்கும்.

**த.விதுலன் - தரம் - 09A,**
**விக்டோரியா கல்லூரி சுழிபுரம்.**

## தாய்

பத்து மாதம் என்னை சுமந்தாயே
பட்டுப்போல எம்மை வளர்த்தாயே
பள்ளி எம்மை அனுப்பி வைப்பாயே
படபட என வேலை செய்பவளும் நீயே

உணவுகளை நன்றாக சமைப்பாயே
உறவுகளைக் கட்டி இணைப்பாயே
உள்ளங்கள் அனைத்தையும் அறிந்து
வைத்திருப்பாயே
உயிரினங்களையும் அரவணைப்பாயே

குடும்பத்தில் முக்கியமானவள் நீயே
குதூகலத்தை எமக்கு தருபவளும் நீயே
கண்ணில் வைத்து காப்பவளும் நீயே
காலம் முழுதும் எம் துணையும் நீயே

**இ. மயூகா** தரம் - 10
வ/விபுலானந்தாக் கல்லூரி.



## மரங்களை நாட்டி மண்வளம் பேணுவோம்

வண்ண வண்ண மரங்கள் - நல்ல
வடிவான மரங்கள்
கண்ணைக்கவரும் மரங்கள் - அவை
களிப்பூட்டும் மரங்கள்
மண்ணைக் காக்கும் மரங்கள்
மனிதர் விரும்பும் மரங்கள்
விண்ணை முட்டும் மரங்கள்
விதம்விதமான மரங்கள்

நெட்டையான மரங்கள் - அவை
நெகிழவைக்கும் மரங்கள்
கட்டையான மரங்கள் - நல்ல
கடினமான மரங்கள்
வெட்டையான நிலத்தில்
விரைந்துவீர் நாட்டுவீர் மரத்தை
நாட்டைப் பாதுகாக்க
நல்லவழி இதுவே.

**துவாரகா சண்முகநாதன்**
தரம் - 11B
யோகபுரம் ம.வி.
மல்லாவி.



வேல்ஸ் இளவரசி டயானா 1961ல் பிறந்தார்.

## மாணவர் ஆக்கம்

# கைலாய மலை

இமயமலையைத் தொடரைச் சேர்ந்த ஒரு மலைதான் கைலாய மலை. இதனை கைலை என்றும் கூறுவர்.

இது திபெத் நாட்டில் உள்ளது. 6700 மீற்றர் உயரமுள்ள இந்த மலை இந்துக்களின் புண்ணிய தலமாக விளங்குகிறது.

ஏறக்குறைய 50கி.மீ சுற்றளவைக் கொண்ட கைலை அழகிய லிங்க வடிவில் காட்சியளிக்கிறது. புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படும் மாசை சரோவரம் என்னும் நீர்த்தடாகம் இம்மலைக்குத் தெற்குப் பக்கமாக 65 கி.மீ தொலைவில் இருக்கிறது.

இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் கைலாயத்தைப் புனித தலமாக வழிபட்டு வருகின்றனர்.

**ஆ.அனுஷா**
தரம் 6B,
கிளி/பளை மத்திய கல்லூரி.

## மாணவர் ஆக்கம்

# பொன்மொழிகள்

உள்ளன்பு ஒன்றே போதும் உனது முகத்தை அழகுபடுத்த

ஒன்றாக வாழத் தெரிந்தவன் நன்றாக வாழ்வான்.

நல்ல மனசாட்சி கடவுளின் குரல்

அடக்கம் முதலில் உன் மனதில் இருக்க வேண்டும்.

**வே.இராஜேஸ்வரி**
தரம் 8A
மல்லாவி மத்திய கல்லூரி

# குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ தானடா*



## ஔ ஔவைக்குறள்

திருக்குறள் தெரியும். அது என்ன ஔவைக்குறள்? ஔவையார் பாடிய குறள்தான் ஔவைக் குறள்.

"வீட்டுநெறி" பற்றி ஔவையார் தனது குறள்களில் அழகாக பாடியிருக்கிறார். திருக்குறளைப்போலவே இதிலும் மூன்று பிரிவுகள்.

வீட்டுநெறிப்பால், திருவருட்பால், தன்பால் என்பனவே அவை.

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்று அழகிய பழமொழி ஒன்று உள்ளது கேள்விப்பட்டீர்களா? இதன் அர்த்தம் என்ன தெரியுமா? அண்டமெனும் ஆகாயத்திலுள்ள அனைத்தும், பிண்டம் எனப்படும் நமது உடம்பிலும் இருக்குமாம்.

உ+ம் : அண்டத்திலே சூரியன், நீர், தீ, காற்று போன்றவை உள்ளனதானே. அதேபோல நமது உடம்பிலும் சூரியக்கலை, சந்திரக்கலை, ஐம்பூதங்கள் போன்றவை உள்ளனவாம். என்ன ஆச்சரியமாக இருக்கா? எனக்கும் அதேதான்.

இந்தக் கருத்துக்கள் அனைத்தும் ஔவைக் குறலிலும் சொல்லப்பட்டிருக்கின்றனவாம். நான் வாசிக்கவில்லை. நீங்கள் யாராவது வாசித்திருந்தால் எனக்கும் தெரியப்படுத்துங்களேன்.



மைக்ரோசொப்ட்டின் தந்தை மற்றும் கோடீஸ்வரரான பில்கேட்ஸ் 1955இல் பிறந்தார்.

# பூங்கனியின் தேடல்

பூங்கனியின் தேடலில் சாமாந்தியைத் தொடர்ந்து அடுத்துதெரிவானவர் ஜெனன்!வ/கல்மடு படிவம்-1 அ.த.க. பாடசா லையின் தரம் 9 மாண வனான நகுலேஸ்வரன் ஜெனன் ஒரு இளம் சாதனையாளன் என்று எமக்குத் தகவல் கிடைக்க பாடசாலை அதிபர் திரு.க. செல்வ தேவன் அவர்களைச் சந்தித்து விபரம் கேட்டோம்.



2001ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஜெனன் 2002இல் அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் இரண்டாம் பிரிவுப் பேச்சுப்போட்டியில் மாகாண மட்டத்தில் 2ம் இடத்தையும், 2003இல் அகில உலக இந்து மாநாட்டை யொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் 3ம் இடத்தையும், அதே ஆண்டில் இடம்பெற்ற "சர்வதேச போதைப்பொருள் தடுப்புத் தினப் பேச்சுப்போட்டியில் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றிருக்கிறார்.

அத்துடன் 2004ம் ஆண்டு அன்னை சாரதா தேவியின் 150வது ஆண்டு ஜனனதின பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் 1வது இடத்தையும், 2005ம் ஆண்டு தமிழ் மொழித் தினப் போட்டியில் 3வது பிரிவு பாவோதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்றிருக்கிறார் ஜெனன்.

இவைகள் தவிர கோட்ட, வலயமட்டங்களில் பல பேச்சுபோட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி தகவல்களை வழங்கிய அதிபர் அவர்கள் "எமது பாடசாலை வரலாற்றில் ஜெனன் ஒரு திருப்பு முனை" என்று பெருமையோடு குறிப்பிடுகிறார்.

சரி, ஜெனனை நாம் சந்திக்க வேண்டாமா? சந்தித்தோம். இன் னும் குழந்தை முகம் மாறாத அந்தப் பிஞ்சா ஒரு பாடசாலைக்கு திருப்புமுனையாக அமைந்திருக்கிறது? என ஆச்சரியப்பட்டுப்போனோம்.

எத்தனையோ பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் வாங்கிய அந்தப் பிஞ்சு எம்மிடம் பேசியது இதுதான். "எதிர்காலத்தில் ஒரு சிறந்த பேச்சாளனாக வரவேணும், என்று விரும்புறன் அண்ணா"

வாழ்த்துக்கள் ஜெனன்! உங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஒரு சிறந்த பேச்சாளனை சீக்கிரம் வெளிக்கொண்டு வாருங்கள். உங்கள் அதிபரும். ஆசிரியர்களும், பெற்றோரும் உங்களுக்குத் துணையாக இருப்பார்கள்! கூடவே பூங்கனியும்...

– ஹரீஸ்




முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ 1953இல் பிறந்தார்.

## மாணவர் ஆக்கம்

# உலக நாடுகளின் தேசியப் பறவைகள்

| | | |
|---|---|---|
| இலங்கை | ~ | காட்டுக்கோழி |
| டென்மார்க் | ~ | வானம்பாடி |
| பர்மா | ~ | பெண்மயில் |
| கனடா | ~ | வாத்து |
| கொலம்பியா | ~ | பருந்து |
| அமெரிக்கா | ~ | கழுகு |
| ஜேர்மனி | ~ | வெள்ளைக்கொக்கு |
| இங்கிலாந்து | ~ | ரொபின் |





யோ.மேகலா
தரம் 10A
மு/உடையார் கட்டு ம.வி


## சகல தொடர்புகளுக்கும்....

# பூங்கனி

இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.
தொ.பே : 077 6674609
E-mail : mmcpoonkani@yahoo.com





# குறும்புக் குமரன்

வழங்கும்

*அ முதல் ஃ தானடா*



## அஃகேனம்

அஃகேனம் என்னும் எழுத்தைத் தெரியாமல் யாரும் இருக்கமாட்டீர்கள் இல்லையா? இதனை ஆயுத எழுத்து என்றும், முப்பாற் புள்ளியென்றும் அழைப்பர்.

அந்தக் காலத்திலிருந்தே இவ்வெழுத்து பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த எழுத்தைப் பற்றி தொல்காப்பியம் என்ன சொல்கிறது. இதற்குரிய இலக்கணம் என்ன என்பது பற்றியெல்லாம் விரிவாக சொல்ல விரும்பவில்லை. இந்த அஃகேனம் பாவிக்கப்படும் சில சொற்களைத் தருகிறேன்.

"முஃடீது" என்றால் என்ன தெரியுமா? இச்சொல்லை முள்+தீது எனப் பிரித்து முள்தீமை விளைவிக்கக்கூடியது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அப்படியென்றால் கஃறீது என்றால் என்ன தெரியுமா? இதனை கல்+தீது எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். நாம் கல்லெடுத்து எறிந்து யாருக்காவது மண்டை உடைந்தால் அது தீமைதானே. அதற்காகத்தான் இந்தக் கஃறீது.

இன்னுமொன்று பஃது. புரியவில்லையா? பஃது என்றால் பத்து. அப்போ யாராவது பல் இல்லாதவர்கள் பாட்டுப்பாட விரும்பினால் "பஃதுக்குள்ளே நம்பர் ஒன்று சொல்லு" என்று பாடலாம் இல்லையா.? ●



முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ 1953இல் பிறந்தார்.

# போட்டோ கலாட்டா






**வித்தியாசமான புகைப்படங்களை எடுப்பதில் ஆர்வமுள்ளவரா நீங்கள்?**

உங்கள் புகைப்படங்களைப் பிரசுரிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். நீங்கள் எடுத்த புகைப்படத்தின் 2 பிரதிகளையும், உங்கள் பெயர்முகவரி போன்றவற்றையும் தெளிவாக எழுதி அனுப்பிவையுங்கள்.

**கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் மூலம் நீங்கள் உருவாக்கும் வித்தியாசமான படங்களையும் அனுப்பலாம்.**



முகவரி :
போட்டோ கலாட்டா
பூங்கனி
141, திருநாவற்குளம், வவுனியா.

# திருக்குமரன்

## பல்பொருள் வாணிபம்

பூங்கனியின் அங்கீகாரம்பெற்ற ஏக முகவர்கள்

அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், நாளாந்த, வாராந்த பத்திரிகைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள


திருக்குமரன் பல்பொருள் வாணிபம்,
பிரதான வீதி, நெடுங்கேணி.



இச்சஞ்சிகை காற்று பப்ளிகேஷனுக்காக 61-B, 1ம் குறுக்குத்தெரு, வவுனியாவிலுள்ள வாணி கணனி பதிப்பகத்தால் 2005 ஜூலை 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# NIKSAN
## HARDWARES

67, STATION ROAD, VAVUNIYA.




Design & Printed by : Vaani Vavuniya 024 2223658